Newspaper Reg.No.TNBIL/2003/12746, licensed to post with
prepayment with postal Reg. No. Try/041/2017 - 2019
Posted at RMS, Trichy Junction, Trichy-620 001
Date of Posting - 5th of Every Month

To

_______________

_______________

_______________

டெலிவரி ஆகாவிடில் கீழ்காணும் முகவரிக்கு தயவு செய்து திரும்பி அனுப்பவும்
**தி பிரிண்டிங் ஹவுஸ், காஜாமலை, திருச்சிராப்பள்ளி - 620 023.**

**பதிப்பாசிரியர் குழு**

1. **முனைவர் T.N. கோகுல்நாத் பாபு**, மாநிலத் தலைவர்
2. **பேரா. இ.பி. பெருமாள்**, மாநில பொதுச் செயலாளர், பதிப்பாசிரியர்
3. **பேரா. எம். பாலசுப்ரமணியன்**, மாநிலப் பொருளாளர்
4. **முனைவர் ந. மாரிசாமி**, மாநிலத் துணைத் தலைவர்
5. **முனைவர் ம.இராஜகோபால்**, மாநிலத் துணைத் தலைவர்
6. **பேரா. பார்வதி கோபாலன்**, மாநிலத் துணைத் தலைவர்
7. **பேரா. ஆர். பாக்கியலட்சுமி**, மாநில இணைச் செயலாளர்
8. **பேரா. S. சிவசண்முகம்**, மாநில இணைச் செயலாளர்
9. **பேரா. S. சந்திரா**, மாநில மகளிர் ஒருங்கிணைப்பாளர்

**TANRECTA SPEAKS - TNBIL/2003/12746**

Owned, Edited and Published by Prof. E. P. Perumal, The General Secretary, Tamil Nadu Retired College Teachers' Association.

Printed by S. Zeenath Beevi at The Printing House, No.6, Race Course Road, Khajamalai, Trichy-620 023. Ph : (0431) 2420121, 94435 87233
Email : tanrectatrichy@gmail.com

# TANRECTA SPEAKS

Voice - XVII NOVEMBER - 2018 Speech 5

TANRECTA

## தமிழ் நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம்

பதிவு எண். 236/2000



பேரா. நரசிங்கம்

**Tamil Nadu Retired College Teachers' Association**

Newspaper Regn. No. TNBIL/2003/12746
Website: www.tanrecta.org
Rs. 4 per copy - Subscription (Annual) Rs. 40

3/671, First Street,
Jeeva Nagar, Collectorate (Post)
Dharmapuri - 636 705.

## தலைவர் பக்கம்

அன்புள்ள பேராசிரியர்க்கு, வணக்கம்.

அனைவருக்கும் இனிய தீபாவளி நல்வாழ்த்துக்கள்.

கல்வியை காக்கும் அகில இந்திய அமைப்பின் (JMFE) சார்பாக கருத்தரங்கம் டெல்லி மௌலாங்கர் வளாகத்தில் 29.10.2016 அன்று நடைபெற்றது. மத்திய அரசின் புதிய கல்விக் கொள்கையால் உயர் கல்வித்துறை எந்த அளவுக்கு சிதைக்கப்பட்டு சாமானியன் தன் குழந்தைகளுக்கு தரமான கல்வியை வழங்க முடியாமல் படும் கஷ்டங்களை அனைத்து மாநிலங்களிலிருந்தும் வந்திருந்த ஆசிரியர் மற்றும் மாணவர் அமைப்புகளின் பொறுப்பாளர்கள் எடுத்துக்கூறினர். அனைவருக்கும் இலவசக் கல்வி என்ற கொள்கையை இலட்சியமாகக் கொண்ட அனைத்து இயக்கங்களும் (JMFE) -ன் பின்னே அணிவகுக்க வேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கின்றது. அடுத்த நடவடிக்கையாக **"பாராளுமன்றத்தை நோக்கி"** என்ற பேரணி பிப்ரவரி 2019-இல் மூன்றாம் வாரம் நடக்க இருக்கின்றது. நன்றி.

**எனது முகவரி :** 43/3, மஹால் 2வது தெரு,
மதுரை – 625001. கைப்பேசி : 8428254243

தோழமையுடன்
**T.N. கோகுல்நாத்பாபு**

### TREASURIES AND ACCOUNTS DEPARTMENT

From
Principal Secretary and Commissioner of Treasuries and Accounts
Amm Complex, Veterinary Hospital Campus,
Nandanam, Anna Salai,Chennai - 600 035

To.
All Regional Joint Directors
All Treasury Officers
The Pension Pay Officer,
Chennai

Rc. No. 0631/2018/E2 Dt. 30.10.2018

Sir,

SUB : Revision of Pay Scales and Allowances / Pensions etc - to the teachers / lectures / Professors in Universites Govt./ Govt. Aided Colleges - Instruction Reg.

REF : 1. G.O, (MS), No, 145 Higher Education (H1) Department dated : 06.07.2018
2. This office letter No. 0631/2018/E2 dated 20.08.2018.
3. Letter from T.N. Retired College Teachers Association dated : 28.08.2018
4. This office letter No. 0631/2018/E2 dated 12.09.2018.
5. Letter from T.N. Retired College Teachers Association dated 25.10.2018. Kind attention is invited to the references cited.

In the reference 2nd cited copy of the G.O (MS) No. 145 Highter Education (H1) Department dated : 06.07.2018 was communicated to all Treasury Officers / Pension pay Officers, Chennai For necessary action.

In the reference 3rd cited T.N. Retired College Teachers Association has requested that some of the Treasuries have not fixed the revised pension as per G.O. 1st cited above Further it is stated that as per as per G.O. 313 Finance (PC) dated 25.10.2017 Para 5 (2) Minimum pension of 50% should be paid to them after scrutinizing their application routed through concerned department. All the Treasury Officers / PPO Chennai were requested to revise the pension as per Government Orders vide reference 4th cited.

Now th T.N. Retired College Teachers Association have once again made representation that still some of the Treasuries are not revised the pension as per the G.O,s it is highly regretted. Therefore all the Treasury Officers / PPO, Chennai are requested to revise the pension of all college retired Teachers as per eligibility.

(SD)
**M.Puviyarasu**
Personal Assistant (Treasury Control) to
Commissioner of Treasuries and Accounts





## பொதுச்செயலர் கடிதம்

இனிய பேராசிரியர்க்கு, வணக்கம்

இம்மாதம் 10 மற்றும் 11 ஆம் தேதிகளில் சென்னையில் தொடர் நடவடிக்கையை ஆட்சிக்குழு மேற்கொண்டது. 10.10.2018 அன்று கல்லூரிக்கல்வி இயக்குநரை சந்தித்து மாநாட்டுத் தீர்மானங்களைத் தந்து விரிவாகப் பேசப்பட்டு தீர்மானங்கள் அளிக்கப்பட்டன. உதவி இயக்குநரை சந்தித்து கோரிக்கைகளில் உள்ள முன்னேற்றம் குறித்து பேசப்பட்டது. நமக்கான ஓய்வூதியத் திருத்தம் செய்வதில் சுணக்கம் காட்டும் கல்லூரி முதல்வர்கள், மண்டல இணை இயக்குநர்கள் ஆகியோரைப் பற்றி பேசினோம். ஓய்வூதியர் திருத்தப் படிவங்களை உறுப்பினர்களிடமிருந்து பெற்று அனுப்ப விரைந்து நடவடிக்கை வேண்டி செயல்முறைகள் வழங்கிட முறையீடு தந்துள்ளோம். அதனில் உதவிபெறும் கல்லூரிகட்கு சரியான முறையில் அறிவுறுத்தல் வழங்கக் கூறும்படியும் கூறியுள்ளோம்.

பின்னர் தலைமைச் செயலகம் உயர்கல்வித்துறை மற்றும் நிதித்துறை ஆகியவற்றிற்கும் சென்று தொடர் நடவடிக்கை மேற்கொண்டோம். 11.10.2018 அன்று கணக்கு கருவூலத்துறை சென்று இயக்குநரின் நிருவாக நேர்முக உதவியாளரிடம் தற்போது கருவூலங்களில் ஓய்வூதியத்திருத்தம் வழங்காமல் உள்ளதைப் பற்றி பேசினோம். அதன்பின் முறையீடு தரப்பட்டுள்ளது. மாநாட்டுத் தீர்மானங்கள் பற்றி பேசப்பட்டது. கருவூலங்கள் செயல்படவைக்கத் தேவையான செயல் முறைகள் வழங்க ஒப்புக்கொண்டு உறுதியளித்துள்ளனர். மீண்டும் 25.10.2018, 26.10.2018 ஆகிய நாட்களில் கல்லூரிக்கல்வி இயக்குநர் மற்றும் கருவூலக் கணக்குறையில் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டது.

இம்மாதம் 13ம் தேதி சேலத்தில் ஜேக்டோஜியோ போராட்டத் தயாரிப்பு மாநாட்டினை நடத்தியது. அதனில் வேலை நிறுத்தம் செய்ய உள்ள தேவைப் பற்றி வலியுறுத்தப்பட்டது. பல்லாயிரக் கணக்கில் ஆசிரியர்கள் மற்றும் அரசு ஊழியர்கள் கலந்து கொண்டனர். 14.10.2018 அன்று TNGCTA மண்டல அளவில் பட்டினிப் போராட்டத்தை நடத்தியது. நிறைவேறாத கோரிக்கைகள் மற்றும் பொதுக் கோரிக்கைகளை முன்வைத்து போராட்டம் நடைபெற்றது.

அகில இந்திய அளவில் கல்வியைப் பாதுகாக்க அகில இந்திய சங்கங்கள் மற்றும் மாணவர் அமைப்புகள் 29.10.2018 அன்று புதுதில்லியில் கருத்தரங்கம் நடத்த தயாரிப்புகள் நடைபெற்றுக் கொண்டுள்ளன. களம் காணுவோம். கல்வியை காப்போம்.

**எனது முகவரி :** 3/671 முதல் தெரு, ஜீவா நகர்,
கலெக்டரேட் (அஞ்சல்), தருமபுரி – 636705.
தொலைப்பேசி 04342 – 230397 செல் : 9443334397
E.Mail : perumalep@hotmail.com

வாழ்த்துக்களுடன்,
தோழமையுள்ள
**இ.பி. பெருமாள்**
பொதுச்செயலர்

## மாநிலப் பொருளாளர் அறிக்கை - நவம்பர் 2018

இனிய பேராசிரியர்களுக்கு, வணக்கம்!

நம் கழக உறுப்பினர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள். நமது கழகத்தின் கிளைகளிலிருந்து அக்டோபர் 2018ல் பெறப்பட்ட உறுப்பினர் கட்டணம், செய்திமடல் நிதி, அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதி, கட்டிட நிதி, கேரள வெள்ள நிவாரண நிதி, AIFRUCTO ஆயுள் சந்தா மற்றும் ஆண்டு சந்தா பற்றிய விபரங்கள் :

**சேலம் கிளைப்** பொருளரிடமிருந்து 2018-19க்கு 201 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.30150-/ம், AIFRUCTO ஆயுள் சந்தா 21 உறுப்பினர்களுக்கு ரூ.21000/-ம், கேரள வெள்ள நிவாரண நிதியாக ரூ.10000/- முதல் தவணையாகவும், ஆக மொத்தம் ரூ.61,150/- பெறப்பட்டுள்ளது. ஆயுள் சந்தா (M/s. M. Arunachalam, V. Arunachalam, K. Dhanabalan, P.C. Govindachami, S.V.Govindaraju, D.Jagannathan, P.N.Kandaswami, Mangaiyarkarasi, D.Mani, M.M.Mani, A.Manoharan, V. Murthi, M.Nallathambi, S. Natarajan, P.K.Palanisamy, A.Ramakrishnan, P. Subramanian, G.Venkatesan, T.Nagavalli)

**புதுக்கோட்டை கிளை** உறுப்பினர் திரு. R. திருநாவுக்கரசு அவர்களிடமிருந்து கேரள வெள்ள நிவாரண நிதி ரூ.1000/- பெறப்பட்டுள்ளது.

**தஞ்சாவூர் கிளைச்** செயலரிடமிருந்து 2018-19க்கு AIFRUCTO ஆயுள் சந்தா 4 உறுப்பினர்களுக்கு ரூ.4000/-ம், 2018-19க்கு 16 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.2400/-ம் ஒரு புதிய உறுப்பினரின் செய்திமடல் நிதியாக ரூ.200/-ம் (Prof. K. மனோகரன்), AIFRUCTO ஆண்டுசந்தா 16 உறுப்பினர்களுக்கு ரூ.400/-ம், பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக ரூ.5000/-ம், கேரள வெள்ள நிவாரண நிதியாக ரூ.5000/- என ஆக மொத்தம் ரூ.17000/- பெறப்பட்டுள்ளது. (ஆயுள் உறுப்பினர்கள் : பேரா. M. பெரியசுவாமி, Dr.P.செல்லையன், Dr.M.இளமுருகன், Dr. A. மூர்த்தி)

சென்னைக் கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 3 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.450/- பெறப்பட்டுள்ளது.

திருவாரூர் கிளைச் செயலரிடமிருந்து 2017-18க்கு 3 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.450/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா 2017-18க்கு 3 உறுப்பினர்களுக்கு ரூ.75/- என ஆக மொத்தம் ரூ.525/- பெறப்பட்டுள்ளது.

வேலூர் கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 3 உறுப்பினர்களின் கட்டணம் ரூ. 450/-ம், 2 புதிய உறுப்பினர்களுக்கு செய்திமடல் நிதியாக ரூ.400/-ம் (Dr. G.W.C. மனோகரன், J. ரேவதி) 2018-19க்கு AIFRUCTO ஆண்டுசந்தா 3 உறுப்பினர்களுக்கு ரூ.75/-ம், AIFRUCTO ஆயுள் சந்தா 4 உறுப்பினர்களுக்கு ரூ.4000/- என ஆக மொத்தம் ரூ.4925/- பெறப்பட்டுள்ளது. (ஆயுள் சந்தா - M/s. Lucy P.Augestine, P.Rajendran, J. Revathy, Sasikala Amarasuriya)





நாமக்கல் கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 10 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1500/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா 10 உறுப்பினர்களுக்கு ரூ.250/-ம், 2 புதிய உறுப்பினர்களின் செய்திமடல் நிதியாக ரூ.400/- என ஆக மொத்தம் ரூ.2150/- பெறப்பட்டுள்ளது. (Prof. S. Veerappan, Prof. P.S.Muthu)

செய்யாறு கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 2 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.300/-ம், செய்திமடல் நிதியாக ரூ.400/-ம், AIFRUCTO ஆயுள் சந்தாவாக தலா ரூ.1000/- வீதம் ரூ.2000/-ம், பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக ரூ.1000/-ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ.1000/- என ஆக மொத்தம் ரூ.4700/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர் மற்றும் AIFRUCTO ஆயுள் சந்தா - Dr.S.Devadoss Rao, C.Gnanasoundari)

பொள்ளாச்சி கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு 34 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.5100/-ம் செய்திமடல் நிதியாக 34 உறுப்பினர்களுக்கு ரூ.6800/-ம், AIFRUCTO ஆண்டு சந்தா 34 உறுப்பினர்களுக்கு ரூ.850/- என ஆக மொத்தம் ரூ.12,750/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர்கள் : M/s. R. Rajam, Brahada Sankaran, V.Suseela, Dr. P.R.Balasubramanian, K.Kandasamy, Dr. P. Badri Sriman Narayanan, Dr.K.Kalaimani, N.Anandha Parameswami, S.Lakshmiyammal, N.Seeniyammal, Dr.A.L.Kamalavalli)

மதுரை கிளைச் செயலரிடமிருந்து முதல் மகளிர் மாநாட்டு மாநிலப் பங்களிப்பாக ரூ.8334/- பெறப்பட்டுள்ளது.

கரூர் கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு ஒரு புதிய உறுப்பினர் கட்டணம் ரூ.150/-ம் செய்திமடல் நிதியாக ரூ.200/-ம், பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக ரூ.500/-ம், கழக வளர்ச்சி நிதியாக ரூ.500/-ம் AIFRUCTO ஆயுள் சந்தாவாக ரூ.1000/- என ஆக மொத்தம் ரூ.2350/- பெறப்பட்டுள்ளது. (புதிய உறுப்பினர் மற்றும் AIFRUCTO ஆயுள் சந்தா - Prof. S.Muthukrishnan)

திருநெல்வேலி கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 20 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.3000/-ம், 4 புதிய உறுப்பினர்களின் செய்திமடல் நிதியாக ரூ.800/-ம், AIFRUCTO ஆண்டு சந்தாவாக 20 உறுப்பினர்களுக்கு ரூ.500/- என ஆக மொத்தம் ரூ.4300/- பெறப்பட்டுள்ளது. (Prof. S.பெருமாள், Dr. A. பரமசிவம், Dr.A.ரெங்கசாமி, R. Stephen Rodriquiz)

தூத்துக்குடி கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 3 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.450/-ம், செய்திமடல் நிதியாக ரூ.600/-ம், AIFRUCTO ஆண்டு சந்தாவாக ரூ.75/-ம் என ஆக மொத்தம் ரூ.1125/- பெறப்பட்டுள்ளது. (Dr. S. Raja Chandrasekar, Dr. C. Veeramuthu, Dr. M. Vaithesswaran)

விருதுநகர் கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு 6 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.900/- பெறப்பட்டுள்ளது.

ஈரோடு கிளைப் பொருளரிடமிருந்து 11 உறுப்பினர்களின் கட்டணம் (2017-18 - ஒருவர், 2018-19க்கு - 10) ரூ.1650/-ம், செய்திமடல் நிதியாக 3 புதிய உறுப்பினர்களுக்கு ரூ.600/- என ஆக மொத்தம் ரூ.2250/- பெறப்பட்டுள்ளது. (Prof. N. Ramakrishnan, Dr. P. Sellappan, Dr. Shanmugam)

கோவை - நீலகிரி கிளைப் பொருளரிடமிருந்து 2018-19க்கு5 புதிய உறுப்பினர்களின் கட்டணம் ரூ.750/-ம், செய்திமடல் நிதியாக ரூ.1000/-ம் AIFRUCTO ஆண்டுசந்தா 5 உறுப்பினர்களுக்கு ரூ.125/-, பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதியாக ரூ.2500/-ம் கேரள வெள்ள நிவாரண நிதியாகரூ.2500/ - என ஆக மொத்தம் ரூ.6875/- பெறப்பட்டுள்ளது. (M/s. K. Prakasam, P.Pushpa, Dr. B.Rajaram, S. Andal, Dr. G. Suguna)

சிதம்பரம் கிளைச் செயலரிடமிருந்து இரண்டாம் தவணையாக 18 உறுப்பினர்களிடமிருந்து கேரள வெள்ள நிவாரண நிதியாக ரூ.10000/- பெறப்பட்டுள்ளது.

பழனி கிளைச் செயலரிடமிருந்து 2018-19க்கு, 11 உறுப்பினர்களின் கட்டணம் ரூ.1650/-ம், 7 புதிய உறுப்பினர்களின் செய்திமடல் நிதியாக ரூ.1400/-ம், AIFRUCTO ஆயுள் சந்தாவாக 14 உறுப்பினர்களிடமிருந்து ரூ.14000/-ம், கேரள வெள்ள நிவாரண நிதியாக உறுப்பினர்களிடமிருந்து ரூ.24000/-ம், கட்டிட நிதியாக (Dr.N.Marisamy) ரூ.7000/- என ஆக மொத்தம் ரூ.48,050/- பெறப்பட்டுள்ளது.

கிளைப் பொறுப்பாளர்கள் முந்தைய ஆண்டு சந்தா தொகைகளைப் பெற்று அனுப்புமாறும் புதிய உறுப்பினர்களிடமிருந்து அறக்கட்டளை நிதி, கழக வளர்ச்சி நிதிகளைத் தவறாது பெற்று அனுப்புமாறும், உறுப்பினர்களிடமிருந்து கட்டிட நிதி, கேரள வெள்ள நிவாரண நிதிகளைப் பெற்று அனுப்புமாறும் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**கிளைப் பொறுப்பாளர்கள் தங்களது தொகைகளை அனுப்ப வேண்டிய முகவரி : இந்தியன் வங்கி, திருவானைக்கோவில், திருச்சி SB A/c No. 935236819, IFSC Code : IDIB000S110**

**எனது முகவரி :** 3/175, G.R.T. நகர், திருவாரூர் - 610 001. செல் : 9443976222 E.mail : indirabalu1@gmail.com

அன்புடன்
பேரா. **M. பாலசுப்பிரமணியன்**
மாநிலப்பொருளர்

## கிளைச் செயலாளர்கட்கு

மாதாந்திரக் கூட்ட அறிக்கை பொதுச் செயலாளருக்கு ஒவ்வொரு மாதமும் 20ம் தேதிக்குள் கிடைக்குமாறு அனுப்பவும். E-Mail உட்பட பொதுச் செயலாளருக்கு தவறாது அனுப்பவும். கால தாமதமானால் அச்சிடமுடியாத நிலை ஏற்பட்டு விடுகிறது. உரிய காலத்தில் நல்ல முறையில் TANRECTA SPEAKS வெளியிட உதவி செய்ய வேண்டுகிறோம். பொதுச் செயலருக்கு அனுப்பாத எதுவும் TANRECTA SPEAKSல் இடம் பெறாது.

**இ.பி.பெருமாள்,** பொதுச் செயலாளர்.





படியுங்கள் !! படியுங்கள்!!! TANRECTA SPEAKS-ஐ படியுங்கள்

**அரசாணைகளைப் படியுங்கள். அறிவிப்புகளைப் படியுங்கள்.**
**கடிதங்களைப் படியுங்கள். கிளைச் செய்திகளை படியுங்கள்.**
**TANRECTA SPEAKS உங்களை வழிநடத்தும். வாழ்வு மேம்படும்.**

## அரசாணை 245 - 18.07.2018

இது ஒரு முக்கியத்துவம் பெற்ற ஆணை. 1.7.1996-க்கு முன்னர் 30 ஆண்டு பணிக்கு முழு ஓய்வூதியம். இதற்கு முன் 33 ஆண்டுகட்கு முழு ஓய்வூதியம் என்ற வேறுபாட்டை மாற்றி அனைவருக்கும் 30 ஆண்டுகட்கு முழு ஓய்வூதியம் எனத் தீர்ப்பு. சேரன்மாதேவி அனைத்து ஓய்வூதியர் சங்கம் தொடர்ந்த வழக்கு நீண்டகாலம் நடைபெற்றது. மாநிலத் தீர்ப்பாயம், உயர்நீதிமன்ற ஒரு நீதிபதி, பின்னர் நீதிபதிகள் முதல் அமர்வு, அதன் பின்னர் உச்சநீதிமன்றம், தீர்ப்பை மறுத்து மாநில அரசின் சீராய்வு மனு என பல நிலைகளைக் கடந்து பெற்ற தீர்ப்பின் வெற்றி.

பணியிலிருந்தோர் 1.10.79 முதல் 1.07.96 வரை ஓய்வு பெறும் போது 33 ஆண்டுகள் பணியாற்றியிருப்பின் மட்டும் முழு ஓய்வூதியம் என்பது தற்போது 30 வயதுக்கு முழு ஓய்வூதியம் எனத் தீர்ப்பு கூறுகிறது. 30 ஆண்டுகட்கு குறைவாக பணிக்காலம் உள்ளோரும் குடும்ப ஓய்வூதியரும் விண்ணப்பிக்கலாம்.

1.10.1979லிருந்து 1.7.1996 முடியும் வரையிலான காலத்தில் பணியாற்றியவர்கள் இந்த அரசாணையில் உள்ள விண்ணப்பம் படிவம் 3 நகல்களை பூர்த்தி செய்து இறுதியில் தாங்கள் பணியாற்றிய கல்லூரியில் சமர்ப்பிக்க வேண்டும். அவர்கள் அதனை உரிய முறையில் பரிசீலித்து மாநிலக் கணக்காளர் அலுவலகத்திற்கு அனுப்பி வைப்பர்.

எனவே முழு ஓய்வூதியம் பெறாதவர் இதனால் பயன்பெறுவர். வாய்ப்பு கிட்டியுள்ளது. பயனடைவீர்!!

**இ.பி. பெருமாள்**
பொதுச்செயலர்

## மாநாட்டு மேடையில் 80 அகவை நிறைந்த பேராசிரியர்கள் பாராட்டபெற்றனர்

1. பேரா. N. **வனசாக்சி** - சென்னை, 2. பேரா. N.P. **முத்துசாமி** - கோயம்புத்தூர், 3. பேரா. M.A.**சண்முக சுந்தரம்** - கோயம்புத்தூர், 4. பேரா. R.**செலையன்** - தர்மபுரி, 5. பேரா. M.**ராஜேந்திரன்** - தர்மபுரி, 6. பேரா. **Dr. S. பழனிசாமி,** பழனி, 7. பேரா. **C. சந்திர சேகரன்** - விருது நகர், 8.பேரா. **N. சந்திர சேகரன்** - மயிலாடுதுறை, 9. பேரா. **R. ஆறுமுகம்** - திருச்சி, 10. பேரா. **Dr. V. ஆறுமுகம்** - ஈரோடு, 11. பேரா. **Dr. S.B. விஸ்வநாதன்** - ஈரோடு, 12. பேரா. **D. கிறிஸ்துதாஸ்** - கன்னியாகுமரி, 13. பேரா. **மோசஸ் கோவிந்த நாராயணன்** - தூத்துக்குடி, 14. பேரா. **C. ராஜசேகரன்** - கும்பகோணம்.

## அரங்க நரசிங்கம் அறக்கட்டளை

29.09.2018 அன்று தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம் 18வது மாநில மாநாடு ஈரோடு குருசாமி திருமண மண்டபத்தில் நடைபெற்ற போது வழங்கிய நிதி உதவி விபரம்.

| | |
|---|---|
| 1. பழனி | MRGD மகாத்மா காந்தி கிராமப்புற வளர்ச்சி, கோகுலம் காப்பகம் |
| 2. திருவாரூர் | பாரத் வளர்ச்சி மகளிர் அமைப்பு |
| 3. மதுரை | தூய்மை விழிகள் அறக்கட்டளை |
| 4. ஈரோடு | 1. சாய் குருஸ்தான் யோக் சென்டர்<br>2. Open Door Mercy Home Trust |
| 5. விழுப்புரம் | அன்பு ஜோதி ஆசிரமம் |
| 6. விருதுநகர் | 1. அழகன் காப்பகம்<br>2. ARSD Trust முதியோர் இல்லம் |
| 7. மயிலாடுதுறை | Students Study Centre |
| 8. தூத்துக்குடி | ஜெப பர்வதம் |
| 9. சேலம் | அகவிழி தர்மசேவை அறக்கட்டளை |

10. பேரா. அரங்க நரசிங்கம் குடும்பத்தினர் நடத்தும் அறக்கட்டளை.

**இ.பி. பெருமாள்**
செயலர், அறக்கட்டளை

---

## கிளை பொறுப்பாளர்களுக்கு

கல்லூரி கல்வி இயக்குநரது செயல்முறைகளை பயன்படுத்தி கிளை பொறுப்பாளர்கள் 2006க்கு முன் ஓய்வு பெற்றவர்களது விண்ணப்பங்களை RJD அலுவலகங்களுக்கும் அரசு கல்லூரி முதல்வர்களுக்கும் தரவும், பின்னர் PPO / Treasury – க்கு அனுப்பி வைக்க நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுகிறோம். கணக்கு கருவூலத்துறையிடமிருந்து செயல்முறைகள் பெற உள்ளோம். அதனை பெற்றப்பின் ஓய்வூதியதிருத்த விண்ணப்பங்கள் மீது நடவடிக்கை எடுக்காத கருவூல அலுவலர்கள் நடவடிக்கை மேற்கொள்ள வைக்க பயன்படும்.

**இ.பி. பெருமாள்**
பொதுச்செயலர்





**DIRECTORATE OF COLLEGIATE EDUCATION**

**From**
**Dr. Tmt.R.Sarumathi**, M.Sc., M.Phil., B.Ed., Ph.D.,
Director of Collegiate Education,
Directorate of Collegiate Education,
Chennai 600 006.

**To**
1. The All Regional Joint Directors of Collegiate Education.
2. The Principals of all Government Arts & Science Colleges and Educational Colleges.

---

**R.C.No.42943/D3/2018 Dated: 30.10.2018**

**Sir/Madam,**

**Sub:** Tamil Nadu Collegiate Educational Service –Implementation of Revised UGC Scales of Pay –Revision of Pension to the retired college teachers and equivalent staff –Request to revise the Pension - regarding.

**Ref:** 1. G.O.(Ms)No. 145, Higher Education (H1) Department, Dated . 06.07.2018
2. Letter Dated 19.09.2018 received from the General Secretary TamilNadu Retired College Teacher's Association.

*******

The General Secretary, TANRECTA in his representation cited has stated that the pension of those teaching staff retired before 2016 may be revised as per G.O(Ms)No.145 table B(ii),(iii) and (iv).

In this connection, I request you to receive the pension revision forms from the concerned individuals and the pension may be revised as per reference 1st cited and may be forwarded immediately to the concerned pension pay officer /Treasury officer with duly counter signed.

I request you to accord priority to the revision of pension so that the retired teaching staff may benefit without facing hardship.

The acknowledgement may be sent to this office.

30/10/18
**Director of Collegiate Education**

**Copy to**
1. All Treasury Officers.
2. Pension Pay Office, Chennai

**மாண்புமிகு அமைச்சகர்கள் அனுப்பிய மாநாட்டு வாழ்த்து செய்திகள்**

## K.P. அன்பழகன்

உயர்கல்வித் துறை அமைச்சர்

தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் 18-வது மாநில மநாடு 29.9.2018 அன்று ஈரோட்டில் நடைபெறுவது அறிந்து பெரு மகிழ்ச்சியடைகிறேன். இக்கழகம் தனது உறுப்பினர்களின் நலனோடு ஏழைகள் மற்றும் மாற்றுத்திறனாளிகளின் முன்னேற்றத்திற்கும் பல உதவிகள் புரிந்து வருகிறது என்பது மிகவும் பாராட்டுக்குரிய ஒன்றாகும்.

இம்மாநாடு சிறப்படைய தமிழ்நாடு ஓய்வு பெற்ற ஆசிரியர் கழக நிர்வாகிகளுக்கும், உறுப்பினர்களுக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அன்புடன் வாழ்த்தும்

**K.P. அன்பழகன்**

மாண்புமிகு உயர்கல்வித்துறை அமைச்சர்

---

## கே.ஏ. செங்கோட்டையன்

பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்

### வாழ்த்துச் செய்தி

இதய தெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின் படி மாண்புமிகு தமிழக முதலமைச்சர், மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களின் நல்லாசியோடு நடைபெறும் தமிழக அரசு கல்வித்துறையில் மாபெரும் மறுமலர்ச்சியை வழங்கி வரும் இவ்வேளையில் தமிழ்நாடு ஓய்வு பெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் 18வது மாநில மாநாடு 2018 செப்டம்பர் 29-ஆம் தேதி ஈரோட்டில் சீரோடும் சிறப்போடும் நடைபெற எனது மனமார்ந்த நல்வாழ்த்துக்கள் தெரிவித்துக்கொள்கிறேன். உயர்க்கல்விக்கு உரமூட்டும் பல்வேறு உயரிய பணிகளை தொடர்ந்து பணியாற்றி வரும் மூத்தப் பேராசிரியப் பெருமக்கள் பங்குபெறும் இந்த மாநாடு சிறப்பாக அமைய மனமார வாழ்த்துகிறேன்.

**கே.ஏ. செங்கோட்டையன்**

மாண்புமிகு பள்ளிக் கல்வித்துறை அமைச்சர்





## மாண்புமிகு கே.சி. கருப்பண்ணன்

சுற்றுச்சூழல் துறை அமைச்சர், தமிழ்நாடு அரசு

### வாழ்த்துரை

தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகத்தின் 18-வது மாநில மாநாடு 2018 செப்டம்பர் 29-ஆம் தேதி ஈரோட்டில் நடைபெறுவதை அறிந்து மகிழ்கிறேன். ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வரும் இந்த மாநாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர்களின் குறைகளாக அரசுக்கு நல்ல ஆலோசனைகளை வழங்குவது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. எனவே இந்த 18-வது மாநாடு சிறக்கவும் திறம்பட இந்த மாநாட்டை நடத்தி வரும் பொறுப்பாளர்களுக்கும் ஓய்வுபெற்ற ஆசிரியர்களுக்கும் என மனமார்ந்த வாழ்த்துக்கள்.

அன்புடன்

மாண்புமிகு. **கே.சி. கருப்பண்ணன்**

---

### கிளைச்செய்திகள்

#### மதுரை கிளை

9.10.2018 - அன்று காலை 11.00 மணிக்கு மூட்டா அலுவலகம், பேரா. **V.** சண்முக சுந்தரம் அரங்கில் நடைபெற்ற அக்டோபர் 2018 மாதப் பொதுக்குழுக் கூட்டத்திற்கு, பேரா. **C.K.** மதுரம் தலைமைதாங்கி வரவேற்று பேசியதுடன், தனது ஆயுத பூஜை மற்றும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொண்டார். கிளையின் உறுப்பினர் பேரா. **S.** ஆறுமுகம் (யாதவர் கல்லூரி) - அவர்களின் திடீர் மறைவிற்கு, அஞ்சலி தெரிவிக்கும் பொருட்டு, உறுப்பினர்கள், 2-நிமிடம் அமைதி காத்தனர். இந்த மாதக் கூட்டத்தில், மொத்தம் 70 பேர் கலந்து கொண்டனர்.

பிறந்த நாள் கொண்டாடும் பேராசிரியர்களின் பெயர்களை, இணைச் செயலாளர் பேரா. **S.** சேதுராக்காயி வாசிக்க, அவர்களுக்கு உறுப்பினர்கள், வாழ்த்துக் கூறி மகிழ்ந்தனர். அவர்கள் (5பேர்) கைத்தறி ஆடை அணிவிக்கப்பட்டு, மரியாதை செய்யப்பட்டனர். புதிய உறுப்பினர்கள், பேராசிரியர்கள் ஞா. ஜோசப் பன்னீர் செல்வம் மற்றும் வெ. கௌரி, தங்களை அறிமுகம் செய்து, இப்பேரியக்கத்தில், தங்களை இணைத்துக் கொண்டனர்.

செயலாளர் பேரா. **G.** ராமமூர்த்தி, கடந்த மாத செயல்பாடுகளை, உறுப்பினர்களுக்கு விளக்கிக் கூறினார். புதிய ஓய்வூதியத் திருத்தத்திற்காக, வினியோகிக்கப்பட்ட படிவத்தில், எந்த நடவடிக்கையும், எடுக்கப்படாதது பற்றி கூறப்பட்டது. மாநில மாநாட்டில், உறுப்பினர்கள் கலந்துகொள்ளும் பொருட்டு,

தொடர்ந்த சுற்றறிக்கைகள் **(Whatsapp)** மூலம், உறுப்பினர்கள் ஆர்வமாக கலந்து கொள்ள கேட்டுக் கொள்ளப்பட்டது. மதுரை கிளையிலிருந்து 35 உறுப்பினர்கள் கலந்து கொண்டது, பெருமைக்குரிய விஷயமாகும்.

நாம் இழந்த உரிமைகளை மீட்டெடுக்கும் பொருட்டு, அரசு ஊழியர் ஆசிரியர்களின் ஒட்டுமொத்த போராட்டம் வெற்றி பெற, நம்முடைய ஒத்துழைப்பை நல்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது. கடந்த 4.10.2018 அன்று, மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் நம் கிளை சார்பாக, 5 பேர் கலந்து கொண்டதற்கு, பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இதுமாதிரியான போராட்டங்களில், உறுப்பினர்கள் தவறாது பங்கேற்க கேட்டுக் கொள்ளப்பட்டது. இப்போராட்ட நிகழ்வுகளை, அவ்வப்போது **Whatsapp** மூலம் தொகுத்து வழங்கிக் கொண்டிருக்கும் பேரா. சுந்தர்பாபுவுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

புதிய ஓய்வூதிய திருத்தம் சம்பந்தமாக, மாவட்ட கருவூல அதிகாரியை, நிர்வாகிகள் இருமுறை சந்தித்து, அது சம்பந்தமாக நமது விளகக்கங்களை தெரிவித்ததுடன், **AIFRUCTO** பொதுச் செயலாளர் முனைவர் **B.** பார்த்தசாரதி, மாநில கருவூல இயக்குநருக்கு அனுப்பிய கடிதத்தின் நகலை, மாவட்ட கருவூல அதிகாரிக்கு அளித்து, ஆவன செய்யக் கேட்டுக் கொண்டோம். மாநிலத் தலைமை கேட்டுக் கொண்டபடி, சென்னை மாவட்ட கருவூல அதிகாரிகள் புதிய ஓய்வூதியத் திருத்தம் சம்பந்தமாக மேற்கொண்ட முடிவினை, அனைத்து மாவட்ட ஓய்வூதியர்களுக்கும் விரிவுபடுத்தி, அனைத்து ஓய்வூதியர்களின் இன்னல்களைப் போக்க, தலைமை தக்க நடவடிக்கை எடுக்கக் கேட்டுக் கொள்ளப்படுகிறது. மதுரை காமராஜர் பல்கலை துணைவேந்தரின் **Review Petition** உச்ச நீதி மன்றத்தில் தள்ளுபடி செய்யப்பட்டது, கல்வியாளர்களின் தொடர்ந்த போராட்டத்திற்குக் கிடைத்த வெற்றியாகும்.

கேரள வெள்ள நிவாரண நிதி 2-வது தவணையாக ரூ. 34,500/- (முப்பத்து நான்கு ஆயிரத்து, ஐநூறு) மட்டும் மாநிலத்தலைவர் பேரா. கோகுல்நாத் பாபு மூலம் அனுப்பப்பட்டது பற்றியும், ஆண்டு மலருக்கு நமதுகிளை மொத்தம் 10-பக்கங்கள் விளம்பரங்கள் அளித்தது பற்றியும், கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது. தென் மாவட்ட கல்லூரி ஆசிரியர்கள் **(MUTA)** மாநில மாநாடு, நாகர்கோயிலில் சிறப்பாக நடந்தேறியது பற்றியும், **AIFRUCTO** பொதுச்செயலாளர் பார்த்தசாரதியும், மற்ற நிர்வாகிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தது பற்றியும் தெரிவிக்கப்பட்டது. கேரள வெள்ள நிவாரண நிதி, மலருக்கு விளம்பரம் உறுதியளித்த பேராசிரியர்கள் தாங்கள் கிளைக்கு, கொடுக்க வேண்டிய தொகையை உடன் அளிக்கக் கேட்டுக் கொள்ளப்பட்டது.

சொந்த காரணங்களல், கிளைச் செயலாளர் பேரா. **G.** ராமமூர்த்தி டெல்லி சென்றிருந்த போது, கிளையின் பணிகளை, தொய்வின்றி செய்ய உதவிய பேராசிரியர்கள் **K.V.** ஆனந்தன், **S.** மகாதேவன், **V.** சிவனுப்பாண்டியன், பார்த்தசாரதி, மனோகரன் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. **Save MKV** அமைப்பு மூலம், பல்வேறு விழிப்புணர்வு மற்றும் ஆர்ப்பாட்டங்களிலும் கலந்து கொள்வதும் பாராட்டுக்குரியது.





பேரா. அரங்க. நரசிங்கம் அறக்கட்டளை சார்பில், நமது கிளைக்கு வழங்கப்பட்ட ரூ. 10,000/- (பத்தாயிரம்) மட்டும் தூய்மை விழிகள் அறக்கட்டளை - நிறுவனத்திற்கு பொருட்கள் வாங்குவதற்காக, நன்கொடை, முனைவர் **S.** போத்தி ரெட்டி அவர்களால் வழங்கப்பட்டது. பேரா. **T.N.** கோகுல் நாத் பாபு அவர்கள், மாநில மாநாடு செய்திகள் மற்றும், மாநில நடவடிக்கைகள் குறித்துப் பேசினார். முனைவர் **B.** பார்த்தசாரதி, **AIFRUCTO** செய்திகளைத் தொகுத்தளித்தார். 29.10.2018 அன்று டெல்லியில் நடைபெறும் **SAVE EDUCATION, SAVE NATION** கூட்டத்திற்கு உறுப்பினர்கள் கலந்து கொள்ளக் கேட்டுக் கொண்டார்.

11.9.2018-அன்று, மதுரைக் கிளையில் நடந்த பொதுக்குழுக் கூட்டத்தில் முடிவாற்றியபடி, மதுரையில் நடைபெற்ற மகளிர் மாநில மாநாட்டு வரவு-செலவு போக, மீதமுள்ள ரூ. 16668/- சமமாகப் பிரித்து ரூ. 8334/- (எட்டாயிரத்து முன்னூற்று முப்பத்து நான்கு) மட்டும் காசோலை மூலம், மாநிலப் பொருளாளருக்கு, இத்துடன் அனுப்பப்படுகிறது. ஓய்வூதிய - தன் விவரக் குறிப்பு படிவத்தை, பேரா. **S.** சண்முக சுந்தரம் தயார்செய்து, அதை பிரதிகள எடுத்து, அனைத்து உறுப்பினர்களுக்கும் இலவசமாக வழங்கினார். இப்படிவத்தினைப் பூர்த்தி செய்து, ஆவணங்கள் அனைத்தும், ஒருங்கிணைத்து பாதுகாத்து வைத்துக் கொண்டால், அவசரத் தேவைக்கு உதவியாக இருக்கும். தமிழ்நாடு அரசு சமீபத்தில் அறிவித்த 2% அகவிலைப்படி, அனைவருக்கும் வங்கிமூலம் வழங்கப்பட்டது, உறுதிப்படுத்தப்பட்டது. மத்திய அரசாங்கம் கேபினட் செகரட்டியேட் கீழ் இயங்கும் **"Directorate of Public Grievances"** -இல், நம்முடைய புகார்களைப் பதிவு செய்தியை, செயலாளர் தெரிவித்தார்.

கிளைப்பொருளாளர் முனைவர் **A.** மனோகரன், சென்ற மாத வரவு - செலவு அறிக்கையை தாக்கல் செய்து, கூட்டத்தில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு நன்றி கூறினார். சென்ற மாத, மதிய உணவுக்கான, வரவு - செலவு கணக்கை, செயலாளர் அவையில் சமர்ப்பித்தார்.

தீர்மானங்கள் : 1. **TANRECTA** -வின் 18-ஆவது மாநில மாநாடு சிறப்பாக நடந்தேறியமைக்கு, ஈரோடு கிளை நிர்வாகிகளை, மதுரை கிளை வெகுவாகப் பாராட்டுகிறது.

2. மதுரை கிளை உறுப்பினர்களுக்கு, அடையாள அட்டை வழங்குவதெனவும், அதற்கான செலவுகளை, கிளை ஏற்பதெனவும், இவ்வடையாள அட்டையை, உறுப்பினர்கள், கிளைக் கூட்டத்திற்கு வரும் போதும், ஆர்ப்பாட்டங்கள் மற்றும் முக்கிய கூட்டங்களில் கலந்து கொள்ளும் போதும், உறுப்பினர்கள் உபயோகப்படுத்திக் கொள்ளலாம், எனவும் முடிவாற்றப்பட்டது.

**அடுத்த மாதக் கூட்டம் : நாள் 13.11.2018 செவ்வாய்க்கிழமை காலை 10.30 மணிக்கு பேரா. V. சண்முக சுந்தரம் அரங்கு, மூட்டா அலுவலகம்,** நிதிப் பரிவர்த்தனைகளை, வங்கி மூலம் மேற்கொள்ள விவரம் : இந்தியன் ஓவர்சீஸ் வங்கி, மதுரை மெயின், கணக்கு எண் : **SB. 04901000034557 ; IFSC : IOBA000004** ; பெயர் : **Tamilnadu Retired College Teachers Association, Madurai Unit.** வங்கிப் பண பரிமாற்றம் செய்பவர்கள், உடனடியாக, பொருளாளருக்கு, அலைபேசி எண் : 9443181155 - இல் குறுந்தகவல் தெரிவிக்க வேண்டும். புதிய உறுப்பினர் கட்டண

விபரம் : **TANRECTA** ஆண்டு சந்தா ரூ. 400/- **TANRECTA Speaks - Rs. 200/- AIFRUCTO** ஆயுள் சந்தா ரூ. 1000/- **TANRECTA** நன்கொடை ரூ. 500/- பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நன்கொடை ரூ. 500/- மொத்தம் ரூ. 2600/- வருடா வருடம் புதுப்பித்தல் கட்டணம் ரூ. 400/- மட்டும்.

**பேரா. G. ராமமூர்த்தி**
கிளைச்செயலாளர், மதுரைக் கிளை

## KUMBAKONAM UNIT

The Kumbakonam Unit of Tanrecta met in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening on **13th October, 2018, the second Saturday.** Prof. C.Rajasekaran presided. We congratulate our members who celebrate their birthday in the month of October.Prof. S. MUTHUSAMY, 19/10/1948 Prof.Dr. D.SUKUMAR, 26 – 10 – 1948 Prof.Dr. K.C. SRINIVASAN, 08 – 10 – 1956 Prof. R. SRINIVASAN, 25 – 10 – 1944 and . Prof. Dr. T.G.Ramamoorthy 02 – 10 – 1951. We convey our hearty Diwali greetings to our members. We congratulate the Erode unit in having accomplished in its efforts to conduct the 18th State Level conference successfully. The unit thanked Arasu Jwels, Kumbakonam Arasu Bajaj, Arasu Engineering College and Arasu Polytechnic College for their kind patronage to the Souvenir of the 18th State Conference. We remember with gratitude Prof. S.Kothandapani, for all the interests he has shown. We thank Le Garden Inn Hotel and Iyyangar Guest House for their offers to the Souvenir. We personally thank Prof. T.G.Sethuraman. Our unit member, beloved Prof. Dr. K.Anbazhagan offered nice snacks with coffee celebrating the wedding of his daughter Prof. A.Kanimozhi with Prof Er. Sri K.Manikandan . We thank Prof. Dr. K.Anbazhagan and profusely greet the couple. ஓய்வுபெற்ற கல்லூரி முதல்வர் ஓய்வூதியத்திருத்தம் கல்லூரி கல்வி இயக்குநருக்கு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கு தொடர் நடவடிக்கை எடுக்க சென்னையில் ஒரு குழுவை அமைக்குமாறு இக்கிளை கேட்டுக்கொள்கிறது. We once again request the centre unit and the State Treasurer Prof. Balu, that "**TANRECTA உறுப்பினர் கட்டணம் செலுத்திய விபரம் ( மார்ச் 31, 2018 முடிய )** may kindly be published as it was published in April, 2017 issue. We once again remind our unit members to remit the subscription for the year 2018 – 2019. The subscription may be sent to the unit through NEFT. For NEFT it may be addressed to **NAME: TAMILNADU RETIRED COLLEGE TEACHERS' ASSOCIATION – KUMBAKONAM BRANCH, Bank : CITY UNION BANK KUMBAKONAM TOWN BRANCH, 35/14, KAMATCHI JOSIER STREET, KUMBAKONAM Account No.003 001 000 385 359 IFSCode:CIUB0000003 . MICR Code: 612 054 003 Type of Account: Savings Account** Next November,





2018, monthly meeting will be held on **10th November, 2018, the second Saturday** ,in the premises of Gopal Rao library, Town Hall Road, Kumbakonam, by 5.30, in the evening.

**Dr.D.Sukumar,**
Secretary, Kumbakonam Unit of TANRECTA

## PARAMATHI VELUR UNIT

The meeting of our unit was held at South Indian Residency A/C Hall at P. Velur at 6.30 PM on Saturday the 13th October 2018. The Vice President Prof. N. Samban welcomed the members present. The Secretary read out the recent circulars from the General Secretary Prof. E.P.Perumal and explained the contents in detail. The members congratulated the members celebrating their birth day in the month of October viz. Prof. N. Nagarajan, and Dr. G. Subramanian, the Marriage Day of Dr. M Karthikeyan . The Secretary proposed heartfelt thanks to the members attended the 18th annual conference held at Erode. The Donar Prof. M. Dhandapani and the members who canvassed for the advertisements in the Conference Magazine were praised by the secretary on behalf of the unit office bearers and the members.

The following resolutions were passed unanimously in the meeting:

1. Congratulate the Organisaers of the 18th conference in an excellent manner with delicious lunch and hospitality for the entire day in a praiseful manner.
2. Congratulate Prof. A. Muthusamy, Librarian for attaining 80th year of his age and the certificate received from the conference was handed over to him by the Office Bearers of our Unit at his residence.
3. Request was made among the members to become Life Members of AIFRUCTO.

Dinner was hosted by the Members Dr. G. Subramanian and Dr. M Karthikeyan who were thanked by the Joint Secretary Prof. P. Dhandapani on behalf of the members present.

The meeting came to an end after proposing vote of thanks by the Treasurer Dr. K. Chandrasekaran.

**Dr. T.P.J. BHARATHI**
Secretary, Paramathi Velur

## தூத்துக்குடி கிளை

எமது கிளையின் அக்டோபர் மாதக் கூட்டம் 09.10.2018 செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. **S.C.** எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளையின் தலைவர் முனைவர் **P.** ஆனந்த வேதா தலைமை தாங்கி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்.

29.9.2018 அன்று ஈரோட்டில் நடைபெற்ற **TANRECTA** 18-வது மாநில மாநாட்டு நிகழ்வுகளைப் பற்றி **G.C.** உறுப்பினர் பேரா. **C.** இமானுவேல் விரிவாக

பேசினார். மேலும் அவர் ஈரோட்டு கிளை உறுப்பினர்கள் மிக சிறப்பாக மாநாட்டினை ஏற்பாடு செய்திருந்தனர் என்று பாராட்டினார்.

இந்த மாநாட்டில் 80 வயதை தாண்டிய எமது உறுப்பினர் திரு.மோசஸ் கோவிந்த நாராயணன் அவர்களுக்கு பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது.

இம்மாநாட்டில் எமது கிளை உறுப்பினர் முனைவர் மா. ராமசந்திரன் எழுதிய கைபேசியே உன்னோடு பேசுகிறேன் என்ற கவிதை நூலையும் இரக்கம் கொள்வோம், விட்டு கொடுப்போம் என்ற ஆளுமைப் பண்புகள் பற்றிய கட்டுரை தொகுப்பு நூலையும் தமிழ் நாடு ஓய்வு பெற்ற அலுவலர் சங்க தலைவர் திரு. ரங்கராஜன் வெளியிட்டார். முதல் பிரதிகளை எமது கிளைச்செயலர் பேரா.ம. கமல்ராஜ் அவர்கள் பெற்றுக் கொண்டார்.

திருச்செந்தூர் ஆதித்தனார் கல்லூரியில் பொருளியல் துறைத் தலைவராக பணிபுரிந்து ஓய்வு பெற்ற முனைவர் S. ராஜா சந்திரசேகர், தூத்துக்குடி வ.வு.சி கல்லூரி வரலாற்று துறைத் தலைவராக பணியாற்றி ஓய்வுபெற்ற முனைவர் C. வீரமுத்து ஆகிய இருவரும் இம்மாதத்தில் எமது கிளையின் புதிய உறுப்பினராக சேர்ந்துள்ளனர்.

கிளையின் துணைத்தலைவர் பேரா. P. அலெக்ஸ்சாண்டர் கனகராஜ் அனைவருக்கும் நன்றி கூறினார். கிளையின் நவம்பர் மாதக் கூட்டம் 13.11.2018 இரண்டாம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணி அளவில் தூத்துக்குடி பேரா. S.C. எடிசன் அவர்கள் இல்லத்தில் நடைபெறும்.



2017-2018 - ஆண்டு மற்றும் 2018-19 ஆம் ஆண்டிற்கான உறுப்பினர் கட்டணம் முறையே ரூ. 400/- (நானூறு) செலுத்தாதவர்கள் கிளையின் வங்கிக் கணக்கில் செலுத்த கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

Account No: 505561496; Indian Bank, Melur Branch, Tuticorin
IFSC Code: IDIB000M083 A/C Name. Tamilnadu Retired College Teacher's Association, Thuthukudi.

**பேரா. ம. கமல்ராஜ்**

செயலர், தூத்துக்குடி கிளை, செல் : 94423 06905

## திருச்சி கிளை

அக்டோபர் மாதக் கூட்டம் 13.10.2018 அன்று மாலை 5 மணி அளவில் கி.ஆ.பெ.விஸ்வநாதன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெற்றது. பேரா.கு.கண்ணன்





தலைமை தாங்கினார். 37 உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். பேரா.கு.கண்ணன் வரவேற்பு நல்கினார். ஓய்வூதியம் தொடர்பான விண்ணப்பங்கள் கல்லூரிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டது குறித்து கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இம்மாதம் பிறந்தநாள் காணும் உறுப்பினர்களுக்கு பேரா. ஹுசைனி அவர்கள் வாழ்த்து தெரிவித்தார்கள். ஈரோடு மாநாடு சிறப்பாக நடத்திய ஈரோடு கிளைக்கு வாழ்த்தும் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. நமது உறுப்பினரும் பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி வரலாற்றுத் துறை பேராசிரியர் U.A.ஜெகநாதன் அவர்கள் 19.10.2018 அன்று இயற்கை எய்தினார் என்பதையும் TANRECTA உறுப்பினரும் பெரியார் ஈ.வெ.ரா. கல்லூரி தமிழ்த்துறை பேராசிரியர் திரு. சண்முகநாதன் அவர்கள் துணைவியார் 24.10.2018 அன்று இயற்கை எய்தினார் என்பதையும் வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

திருச்சி நகரில் உள்ள பல்வேறு கல்லூரிகளுக்கு பொறுப்பாளர்கள் சென்று ஓய்வூதிய திருத்தம் தொடர்பான பணிகளை மேற்கொள்வதென தீர்மானிக்கப்பட்டது.

கீழ்காணும் தொகை பல்வேறு நாட்களில் மாநிலப் பொருளாளர் பேரா. பாலசுப்ரமணியன் அவர்களுக்கு அனுப்பப்பட்டது. 15.05.2017-ல் ரூ.23,250, 26.03.2018-ல் ரூ. 25050, 12.09.2018-ல் ரூ. 15000/- மாநாட்டு வருவாயில் மீதமுள்ள தொகையில் ரூ.58,000/- மத்திய தொகுப்புக்கும், மலர் வருவாயில் மீதமுள்ள தொகை ரூ.21,000/- பேரா. நரசிங்கம் அறக்கட்டளைக்கும் அனுப்பப்பட்டது எனும் தகவல் பொருளாளர் ஹுசைனி அவர்களால் தெரிவிக்கப்பட்டது.

பொருளாளர் ஹுசைனி அவர்கள் நன்றி கூற கூட்டம் முடிவடைந்தது. **அடுத்த கூட்டம் நவம்பர் 11ம் தேதி சனி மாலை 5 மணிக்கு கி.ஆ.பெ. விசுவநாதன் மேல்நிலைப்பள்ளியில் நடைபெறும்.**

**பேரா. N. பாஸ்கரன்**

செயலர், திருச்சிக் கிளை

## சிதம்பரம் கிளை

கிளையின் மாதாந்திரக் கூட்டம் 13.10.2018 அன்று நடந்தது. வழக்கமான முகமன்கள் வரவேற்புரைக்குப்பின் கிளையில் புதிய உறுப்பினர்களாக சேர்ந்த இருவர் பற்றி செயலர் இளங்கோவன் கூறினார். பேரா. திருமதி. வனிதாமணி (உயிரிவேதியியல் துறை, அரசினர் ஞானாம்பிகை மகளிர் கல்லூரி, மயிலாடுதுறை) பேரா. த. சொக்கலிங்கம் (இயற்பியல் துறை, அருள்மிகு கொளஞ்சியப்பர் அரசு கல்லூரி, விருத்தாசலம்) இருவரும் வாழ்த்தி வரவேற்கப்பட்டனர். மிக நீண்ட காலத்திற்குப்பின் திரு. சொக்கலிங்கம் அவர்களை இசையச் செய்து உறுப்பினராக்கிய பேரா. ஆர். முத்துக்குமரன் அவர்களின் பங்கு பாராட்டிற்குரியது.

இம்மாதம் பிறந்தநாள் கண்ட உறுப்பினர்கள், திரு. கே.பி.வடிவேலு, திரு. எம். சம்மந்தம், முனைவர் தியாகேசன், திரு. சிவகாமி, முனைவர் வி. விவேகானந்தன் ஆகியோர் அமைதியான நோயற்ற வாழ்வு அமைய வாழ்த்தப்பட்டனர். முன்னதாக 80 வயது நிரம்பிய பேரா. டி. முத்துக்குமரன் அவர்களுக்கு வாழ்த்தும் பாராட்டும்

தெரிவித்து பொன்னாடை போர்த்தி கவுரவிக்கப்பட்டது. தலைமைக் கழகத்தால் வழங்கப்பட்ட பாராட்டிதழ் 80 வயதுக்கு மேல் ஆன பேரா. கே.பி.வடிவேலு அவர்களால் வழங்கப்பட்டது.

மயிலாடுதுறைக் கிளையின் முன்னாள் செயலர், திரு. அந்தோணி துரைராஜ் அவர்கள் "சிறந்த கிளைச் செயலாளராக கடந்த 10 ஆண்டுகளாக மதிப்பிடுகிறேன்" என செயலர் இளங்கோவனைப் பாராட்டி எழுதியுள்ளதற்கும் 'தங்களின் பணி சிறக்க வாழ்த்துக்கள்' என்று கூறியமைக்கும் செயலர் நன்றி பாராட்டினார்.

ஈரோட்டில் 29.09.2018 அன்று நடந்த நமது 18 ஆவது மாநில மாநாட்டில் நம் கிளையின் ஒன்பது உறுப்பினர்கள் ஒன்றாகவும் மேலும் நால்வர் நேராக தனியே வந்தும் கலந்து கொண்டனர். அவர்களின் பேராளர் கட்டணம் (தலா ரூ.200) கிளையின் நிதியிலிருந்து செலுத்தப்பட்டது. செயலர் இளங்கோவன், பேராசிரியர்கள் வி. திருநாவுக்கரசு, தர்மலிங்கம், கே. கலியபெருமாள் மாநில செயற்குழு உறுப்பினர்) பி. சிவப்பிரகாசம், பி. முருகேசன், எஸ்.மணி, கே.ஜெயராமன், கே.பி.சுப்பிரமணியன் ஆகிய ஒன்பது பேர் முதல் நாளே சென்றதையும் அடுத்தநாள் காலை பேராசிரியர்கள் டி. இராமசாமி (துணைத்தலைவர்) ஏ. தெய்வநாயகம், ஆர்.முத்துக்குமரன், த. சொக்கலிங்கம் ஆகியோர் வந்து கலந்து கொண்டதையும் செயலர் குறிப்பிட்டார். மாநாட்டை மிகவும் சிறப்புடனும் சீருடனும் நடத்திய ஈரோட்டுக் கிளைப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்களுக்கு உளங்கனிந்த பாராட்டுக்கள். மாநாட்டு நிகழ்வுகள் அக்டோபர் மாதச் செய்தி மடலில் வந்துள்ளது. செப்டம்பர் 30 மற்றும் அக்டோபர் 1 ஆகிய இருநாட்களும் ஒன்பது உறுப்பினர்களும் தங்கியிருந்து பல வரலாற்று, ஆன்மிக முக்கியத்துவம் வாய்ந்த இடங்களைச் சுற்றிப் பார்த்து வந்தனர்.

2006க்கு முன்னர் ஓய்வு பெற்றவர்களின் ஓய்வூதியத்திருத்த செயல்முறைகள் சிதம்பரம் கல்லூரி முதல்வரின் ஒப்புதலுடன் சிதம்பரம் கருவூலத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. விரைவில் செயல்படுத்தப்படும் என நம்பிக்கை உள்ளது. விருத்தாசலம் கல்லூரி முதல்வர் கல்லூரிக் கல்வி இயக்குனருக்கு 'தெளிவு படுத்த' வேண்டிக் கடிதம் எழுதி உள்ளார். இதனை பொதுச்செயலர் அவர்களுக்கு தெரிவித்த அவர் க.க. இயக்குனர் மூலம் தொலைபேசியில் அம்முதல்வரை அழைத்து குழப்பத்திற்கு இடமின்றி உடனடியாக திருத்தம் வழங்கக் கூறினார். புதுக்கோட்டை ஆசிரியர் பயிற்சி கல்லூரி முதல்வர் நமது உறுப்பினர் பேரா. சின்மயானந்தம் அவர்களது பூர்த்தி செய்த ஓய்வூதியத் திருத்தப் படிவம் கையொப்பமிடாமல் அனுப்பியுள்ளதை மீண்டும் பேசி சரியாக அனுப்ப உறுதியாகியுள்ளது.

பிறந்தநாள் விருந்தளித்த பேராசிரியர்கள் கே.பி.வடிவேலு, எம்.சம்மந்தம், சிவசாமி ஆகிய மூவருக்கும் நன்றி பாராட்டப்பட்டது.

**அடுத்த கூட்டம் நவம்பர் மாதம் 10 ஆம் நாள், இரண்டாம் சனிக்கிழமை நடைபெறும்.**

**பேரா. க. இளங்கோவன்**
செயலர், சிதம்பரம் கிளை.





## இராமநாதபுரம் கிளை

இராமநாதபுரம் கிளையின் மாதாந்திர பொதுக்குழு கூட்டம் 13.10.2018 சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக்கல்லூரி வளாகத்தில் கிளைத் துணைத்தலைவர் பேரா. எஸ்.சேசுராஜ் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

வருகை புரிந்த உறுப்பினர்களுக்கு வரவேற்பும், கூட்டத்திற்கான கருதுபொருள் பற்றிய விளக்கமும் தலைமை உரையில் இடம் பெற்றது.

அடுத்து பேசிய கிளை உறுப்பினர் பேரா. முனைவர் எஸ். சுரேஷ்தாஸ் அவர்கள் 29.09.2018 அன்று ஈரோட்டில் நடைபெற்ற 18-வது மாநில மாநாடு தொடர்பான செய்திகளையும், தீர்மானங்களையும் எடுத்துரைத்தார்கள்.

அடுத்து பேசிய கிளைச் செயலாளர் பேரா. க.ஜீவானந்தம் அவர்கள் "சிறுநீரகம்" என்ற தலைப்பில் ஆழமான மிகவும் பயனுள்ள உரையை வழங்கினார்கள். உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு உரிய விளக்கத்தினை தெரிவித்தார்கள்.

உறுப்பினர்களுக்கு இரவு உணவினை பேரா. முனைவர். எஸ். சுரேஷ்தாஸ் அவர்கள் வழங்கி நன்றியை பெற்றுக் கொண்டார்கள். **அடுத்த கிளை பொதுக்குழு கூட்டத்தினை வருகின்ற 17.11.2018 சனிக்கிழமை மாலை 6.30 மணி அளவில் இராமநாதபுரம் விவேகானந்தா சமுதாயக் கல்லூரி வளாகத்தில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.**

கிளை இணைச் செயலாளர் பேரா. முனைவர் பழனிச்சாமி அவர்களின் நன்றி உரையுடன் கூட்டம் நிறைவடைந்தது.

**பேரா. க. ஜீவானந்தம்**
செயலர், இராமநாதபுரம் கிளை.

## தஞ்சாவூர் கிளை

எமது கிளையின் பொதுக்குழுக்கூட்டம் 14.10.2018 அன்று காலை 10.30 மணிக்கு தஞ்சை - மன்னர் சரபோஜி அரசுக் கல்லூரி ஆங்கிலத்துறை வகுப்பறை 51ல் நடைபெற்றது. கிளையின் மூத்த உறுப்பினரும் மாநிலப் பொதுக்குழு உறுப்பினருமாகிய பேரா. என். வெங்கடேசன் கூட்டத்திற்கு தலைமை வகித்தார்.

கிளைப் பொருளாளர் பேரா. ஆ. இராமகிருஷ்ணன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார். கிளைச் செயலாளர் முனைவர் வே. இராமசாமி இயக்கச் செய்திகளை உறுப்பினர்களுடன் பகிர்ந்து கொண்டார். ஈரோட்டில் 29.09.2018 அன்று நடைபெற்ற 18-வது மாநில மாநாடு மிகச்சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததையும், மாநாட்டு நிகழ்வுகளையும் பேரா. அரங்க. நரசிங்கம் அறக்கட்டளையின் சிறப்பான பணிகளைப் பற்றியும், 80 வயதைக் கடந்த நமது உறுப்பினர்களுக்கு மாநாட்டில் சிறப்பு செய்யப்பட்டதையும் எடுத்துரைத்தார்.

புதிய ஓய்வூதியம் - அது தொடர்பாக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள், மாவட்டக் கருவூலருடன் பொறுப்பாளர்கள் சந்திப்பு ஆகியவற்றைப் பற்றி உறுப்பினர்களிடம் விரிவாக எடுத்துரைத்தார்.

கிளை நிதி நிலை மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியம், எதிர்வரும் ஜனவரி 2019 நடைபெறவுள்ள உறுப்பினர் சங்கமம் முதலாம் ஆண்டு விழா, கேரளா

பேரிடர் நிதிக்கு உறுப்பினர்கள் மனமுவந்து நன்கொடையளித்தல் ஆகியன பற்றி விவாதிக்கப்பட்டது.

அக்டோபர் மாதம் பிறந்தநாள் கண்ட பேராசிரியர்கள் என். இராமகிருஷ்ணன், திருமதி. ஜீவரத்தினம், ஜி. இராமன், வி. மணிவண்ணன், எம். கிருஷ்ணமூர்த்தி, துல்கருணை, எஸ். வெங்கட்ராமன், செல்வராஜ், எஸ்.ஜெய பாஸ்கரன் சார்லஸ், மு.வீராசாமி, வே. இராமசாமி ஆகியோருக்கு கிளையின் சார்பாக பிறந்தநாள் வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. மேற்கண்ட பேராசிரியர்கள் நல்ல உடல் நலத்துடனும் மன அமைதியுடனும் நீண்ட நாள் வாழ வாழ்த்தப்பட்டனர். பிறந்தநாளில் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் பேராசிரியர்கள் எம்.கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜ், எம்.வீராசாமி, வே. இராமசாமி ஆகியோர் இனிப்பு, காரம் வழங்கி மகிழ்ந்தனர். அவர்களுக்கு கிளையின் சார்பாக நன்றி தெரிவிக்கப்பட்டது. இறுதியில் கிளை இணைச் செயலாளர் பேரா. கு. ஏகநரேந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

**தீர்மானங்கள் :-**

1. 18வது மாநில மாநாட்டை ஈரோட்டில் மிகச்சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடத்திய தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழகம் ஈரோட்டுக் கிளைப் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் மற்றும் மாநிலப் பொறுப்பாளர்கள் அனைவரையும் கிளைப் பொதுக்குழு பாராட்டுகிறது.
2. மன்னர் சரபோசி அரசுக் கல்லூரியில் பணியாற்றி ஓய்வுபெற்ற பேராசிரியர்களின் ஓய்வூதியத் திருத்தம் தொடர்பான விண்ணப்பங்களின் மீது விரைந்து நடவடிக்கையெடுத்து வரும் கல்லூரி முதல்வர், நிதியாளர், கண்காணிப்பாளர் மற்றும் உதவுகின்ற அலுவலக நண்பர்கள் அனைவருக்கும் பொதுக்குழு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.

**பேரா. வே. இராமசாமி**
செயலர், தஞ்சாவூர் கிளை.

## கன்னியாகுமரி கிளை

கன்னியாகுமரிக் கிளையின் மாதாந்திரக் கூட்டம் 9.10.2018 அன்று மாலை 4.30 மணிக்கு கிளைத்தலைவர். ரா. இலட்சுமணசர்மா தலைமையில் நாகர்கோவில் YMCA கூட்ட அரங்கில் நடந்தது. வந்தவர்களை பேரா. ஆறுமுகப்பெருமான் வரவேற்றார்.

தொடர்ந்து நடந்த கூட்டத்தில் முன் கூட்ட அறிக்கையைச் செயலாளர் சமர்ப்பித்து அவையின் ஒப்புதல் பெற்றார். கிளைத் தலைவர் தம் தலைமையுரையில் UGC ஊதிய நிர்ணயம் எவ்வாறு நடக்க உள்ளது என்பது பற்றி தெளிவாக அவைக்கு விளக்கினார். அதற்காக எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பது பற்றியும் விளக்கினார். மேலும் இது தொடர்பாக நம் தலைமைக் கழக நிர்வாகிகள் என்னென்ன பணிகளைத் தொடர்ந்து செய்கின்றனர் என்பது பற்றியும் விளக்கினார்.





29.09.2018 அன்று ஈரோட்டில் நடந்த நம் மாநாட்டில் கிளையின் சார்பில் கலந்து கொண்ட ஆறு பேராசிரியர்களுக்கு நன்றி கூறிப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

UGC ஊதிய நிர்ணயத்திற்கு விண்ணப்பம் வேண்டுவோர்க்கு நாகர்கோவில் YMCA ஆபிஸ் நிர்வாகி திரு. கிஷோர் அவர்களிடம் விண்ணப்பங்கள் கொடுக்கப்பட்டுள்ளன. வேண்டுவோர் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம். இந்தச் செய்தி கிளைக் கூட்டத்திலும் கூறப்பட்டது.

கிளைப் பொருளாளர் நன்றி கூறக் கூட்டம் நிறைவுற்றது. **அடுத்த கிளைக்கூட்டம் 13.11.2018 அன்று நடைபெறும்**

**பேரா. குமாரசாமி**
செயலர், கன்னியாகுமரி கிளை

## பொறையார் கிளை

பொறையார் கிளையின் மாதாந்திர கூட்டம் 12.10.2018 வெள்ளிக்கிழமை மாலை 5-மணியளவில் பொறையார் தரங்கம்பாடி வட்ட ஓய்வு பெற்ற அலுவலர் சங்க கட்டிடத்தில் பேரா. அ. அருள்மரியநாதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

1. கடந்த 29.09.2018 அன்று ஈரோட்டில் நடைபெற்ற பதினெட்டாவது மாநில மாநாட்டில் எடுத்த தீர்மானங்கள் வருகை தந்த உறுப்பினர்கள் முன்னிலையில் வாசிக்கப்பட்டு, விவாதிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டன.
2. மாநில மாநாடு சிறப்பாக நடைபெற ஒத்துழைத்த மாநில தலைவர்களையும் மற்றும் பொறுப்பை ஏற்றுக் கொண்டு சிறப்பாக மாநாட்டை நடத்தி முடித்த ஈரோடு சங்க உறுப்பினர்களையும் மற்றும் நிர்வாகிகளையும் இச்சங்கம் மனமாற பாராட்டுகிறது.
3. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு உறுப்பினர்களாக இணைந்து கொண்ட பேரா. தேவதாஸ் மற்றும் முனைவர் கண்ணப்பா அவர்களையும் மனமாற வரவேற்கிறது.
4. **இனிவரும் காலங்களில் இந்த மாதாந்திர கூட்டம் மாதத்தின் இரண்டாவது புதன்கிழமை மாலை 4.30 மணிக்கு நடத்துவது என முடிவு செய்யப்பட்டது.**
5. முனைவர் தம்பையா பிரபுதாஸ், பொருளர் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

**பேரா அ. அருள் மரியநாதன்**
தலைவர், பொறையார் கிளை

## கரூர் கிளை

கரூர் கிளையின் அக்டோபர் மாதக் கூட்டம் கடந்த 14.10.2018 அன்று வழக்கம் போல் நடைபெறும் மகாலில் நடைபெற்றது. கூட்டத்திற்கு கிளைத்தலைவர் பேரா. R. பாண்டியன்ராஜ் அவர்கள் தலைமையேற்க கிளை உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சமீபத்தில் ஈரோட்டில் நடைபெற்ற நம் TANRECTA மாநாட்டிற்குப்பின் கூட்டப்பட்ட கூட்டமாதலால், கூட்டம் சற்று காரசாரமாகவும், விறுவிறுப்பாகவும் சென்றது. மாநாட்டில் உயர்கல்வித்துறை அமைச்சர் மற்றும் இரு அமைச்சர்கள் வருகை புரிந்து நமக்கு சாதகமான ஒருசில அறிவிப்புகளை அறிவிப்பார் என்ற பெருத்த ஆவலுடன் நம் உறுப்பினர்கள் அனைவரும் இருந்தனர்.

மாநாடு வெகு சிறப்பான முறையில் நடைபெற்றது. இதற்காக ஈரோடு உறுப்பினர்களனைவரும் சுமார் ஒரு மாதகாலமாக அயராது உழைத்து பல தரப்பினரையம் வியக்கும் வண்ணம் அமைந்திருந்தது. அரங்க அமைப்பு, விருந்தோம்பல் ஆகிய அனைத்து ஏற்பாடுகளும் மிக அருமையாக இருந்தன. இவற்றிற்கெல்லாம் கரூர் கிளையும், கிளை உறுப்பினர்களும் அவர்களது உழைப்பை பற்றி மனதார புகழ்ந்து, வாயார பாராட்டுகிறது.

மேலும் மாநாட்டிற்குப்பின், 2016-க்கு முன் ஓய்வு பெற்றவர்களுக்கான நிலுவைத்தொகை தொடர்பாக மீண்டும் கல்லூரிக்கல்லூரி இயக்குநர், ஓய்வூதியத் துறை ஆணையர் மற்றும் இது தொடர்பாக இதர அதிகாரிகளைச் சந்தித்து துரித நடவடிக்கை எடுக்கவேண்டும் என்பதற்கான எடுத்த முயற்சிகளுக்கு நம் தலைமை கழக உறுப்பினர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

அத்தோடு 2006-2016 வரை ஓய்வு பெற்றவர்களின் நிலுவைத் தொகையைப் பெறுவதற்கான ஒரு மென்பொருள் (Software) தயாராகிக் கொண்டிருக்கிறது என்று தலைமைக்கழகம் கூறியதற்கு இது நாள் வரை எந்த பதிலும் இல்லாமல் இருக்கிறது. இதனால் இத்தரப்பு உறுப்பினர்கள் மிகுந்த விரக்தியில் உள்ளனர். எனவே தலைமைக்கழகம் இதற்காக துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென கேட்டுக் கொள்கிறது.

மேலும் மாநாட்டிற்கு சென்று வந்ததற்கான வரவு செலவு விபரங்களை கிளைச்செயலர், பொருளாளரிடம் சமர்ப்பித்து கிளை ஒப்புதல் பெறப்பட்டது.

2006-க்கு முன் ஓய்வு பெற்றவர்கள் சிலர் தங்களுக்கான விண்ணப்பங்களை இன்னும் நிறைவு செய்யாமல் உள்ளனர். அவர்களை விரைவில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மேலும் கிளைச்சந்தா நிலுவை உள்ளவர்கள் உடனடியாக கிளைப்பொருளாளரிடம் செலுத்த வேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது. கிளை உறுப்பினர்கள் ஒவ்வொரு கூட்டத்திற்கும் தவறாது கலந்து கொண்டு தங்களது மேலான ஆலோசனைகளையும், கருத்துக்களையும் தெரிவிக்கவேண்டுமென கேட்டுக் கொள்ளப்பட்டது.

**அடுத்த கூட்டம் நவம்பர் 11.11.2018 அன்று இதே அரங்கத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டது**.

இறுதியில் கிளையின் இணைச்செயலர் பேரா. A. M. சண்முகம் அவர்கள் நன்றி கூறி கூட்டம் இனிதே நிறைவுற்றது.

முனைவர். V. **பழனிச்சாமி**
செயலர், கரூர் கிளை.





## விழுப்புரம் கிளை

விழுப்புரம் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 13.10.2018 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு விழுப்புரம், வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் பேரா. இரா. இராசசேகரன் அவர்களது தலைமையில் நடைபெற்றது. வருகைபுரிந்த உறுப்பினர்களை கிளை துணைத்தலைவர் பேரா. எஸ். வி. சுப்புராம் அவர்கள் வரவேற்று உரையாற்றினார். "திங்கள் ஒரு குறள்" என்ற வகையில் பேரா. முனைவர் மா. சற்குணம் அவர்கள் "அவை அஞ்சாமை" என்னும் அதிகாரத்தில் பின்வரும் குறளின் விளக்கத்தினை அளித்தார்:

"உளரெனினும் இல்லாரோடு ஒப்பர் களன் அஞ்சிக்
கற்ற செலச் சொல்லாதார்" (குறள் 730)

கிளைத்தலைவர் தமது தலைமையுரையில், 2% அகவிலைப்படி உயர்வு அளித்த தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்தார். மேலும், 25.09.2018 அன்று மாவட்டக் கருவூலத்தில் நடைபெற்ற, கருவூல அலுவலர் மற்றும் ஓய்வூதியர் சங்கங்களின் பொறுப்பாளர்கள் ஆகியோர் கலந்துகொண்ட குறை தீர்ப்பு கூட்டம் தொடர்பான செய்திகளை உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். ஈரோட்டில் நமது கழகத்தின் 18-வது மாநில மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றதையும் உறுப்பினர்களிடம் தெரிவித்தார். கிளைச் செயலர் பேரா. இர. நிசார் அவர்கள் தமது அறிக்கையில் கடந்த ஒரு மாத காலத்தில் நிகழ்ந்த சங்க செயல்பாடுகளை விவரித்தார். 01.01.2006-க்கு முன்பு ஓய்வுபெற்ற உறுப்பினர்களின் ஓய்வூதியத் திருத்தம் தொடர்பாக தாமும், பேரா. பீ. தனஞ்செயன், பேரா. மு. வரதராசலு மற்றும் பேரா. முனைவர் ந. கன்னையா ஆகியோரும் மாவட்டக் கருவூலரை நேரில் சந்தித்து பேசிய செய்தியை உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார். உறுப்பினர்களின் ஓய்வூதியத் திருத்தம் இம்மாத இறுதிக்குள் அல்லது அடுத்த மாத முதல் வாரத்தில் செய்து முடிக்கப்பட்டுவிடும் என மாவட்டக் கருவூல அலுவலர் உறுதி அளித்துள்ளார் என்ற செய்தியையும் உறுப்பினர்களுக்குத் தெரிவித்தார்.

பேரா. ஆர். முகமது ரியாஸ் இக்பால் அவர்கள், தேர்வுநிலை விரிவுரையாளர் பணிநிலையில் 5 ஆண்டுகள் நிறைவு செய்தோருக்கு, அவரவர் எந்த நாளில் 5 ஆண்டுகள் பணிநிறைவு செய்துள்ளாரோ அந்த தேதியில் ரூ. 14,940/- என்ற அடிப்படை ஊதியம் நிர்ணயம் செய்யப்பட்டு, ஆண்டு ஊதிய உயர்வுகள் வழங்கப்பட்டு, நிலுவைத் தொகை வழங்கப்பட வேண்டும் மற்றும் ஓய்வூதியம் நிர்ணயம் செய்யப்படவேண்டும் என்று கல்லூரிக் கல்வி இயக்குநர் அவர்கள் அண்மையில் செய்முறைகள் வெளியிட்டிருப்பதும், அதன் அடிப்படையில் இக்கிளையின் சில உறுப்பினர்களுக்கு அந்த பயன்கள் கிடைப்பதற்கான நடவடிக்கைகளைத் தாம் மேற்கொண்டிருப்பதையும் உறுப்பினர்களிடம் விவரித்தார். பேரா. பீ. தனஞ்செயன் அவர்கள் கண்டங்கத்தரி, விஷ்ணு கிரந்தி, பற்பாடகம் மற்றும் ஆடாதோடா ஆகிய நான்கும் கலந்து தயாரிக்கப்படும் "கண்டங்கத்திரி குடிநீர்". வைரஸ் ஜுரத்திற்கு நல்ல மருந்தாகப் பயன்படுகிறது என்பதை விவரித்தார்.

இம்மாதம் பிறந்தநாள் காணும் பேரா. முனைவர் ஏ. ஏனஸ்ட் ராஜா, பேரா. கே. வீ. கோவிந்தசாமி, மற்றும் பேரா. எஸ். எஸ். குமார் ஆகியோர்க்கும் இம்மாதம் மணநாள் காணும் பேரா. எஸ். வி. சுப்பராம், பேரா. மு. வரதராசலு மற்றும் பேரா. ஆர். திருமால் ஆகியோர்க்கும் வருகைபுரிந்த உறுப்பினர்கள் தமது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர். கிளைப் பொருளாளர் பேரா.மு. வரதராசலு அவர்களது நன்றியுரைக்குப் பின் கூட்டம் நிறைவடைந்தது.

**அடுத்த மாதக் கூட்டம் 10.11.2018 சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வி.ஆர்.பி. மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெறும் என்றும் அறிவிக்கப்பட்டது.**

பேரா. **இரா. நிசார்,**
செயலர், விழுப்புரம் கிளை.

## திருநெல்வேலி கிளை

திருநெல்வேலிக் கிளையின் அக்டோபர் 2018, மாதாந்திரக் கூட்டம் 11.10.2018 அன்று மாலை 6 மணிக்கு பேரா. M. கதிர்வேல் ஆறுமுகம் தலைமையில் நடைபெற்றது. வருகை புரிந்த உறுப்பினர்களை பேரா. V.அருணாச்சலம் வரவேற்றார்.

இக்கிளையின் புதிய உறுப்பினர்களாக பேராசிரியர்கள் S. பெருமாள் (முதல்வர், மா. மன்னர் கலைக் கல்லூரி, புதுக்கோட்டை) மற்றும் Dr. A. பரமசிவன் (பொருளியல் துறை, M.D.T. இந்துக் கல்லூரி, திருநெல்வேலி) ஆகிய இருவரும் இணைந்துள்ளனர். உறுப்பினர்கள் தங்கள் மகிழ்ச்சியினை பலத்த கரஒலி எழுப்பி வரவேற்றனர்.

ஈரோட்டில் நடைபெற்ற நமது 18வது மாநில மாநாட்டை சீரும், சிறப்புடனும் நடத்திய ஈரோட்டுக் கிளை பொறுப்பாளர்களுக்கும், மாநில பொறுப்பாளர்களுக்கும் இக்கிளை தனது மனமார்ந்த பாராட்டுதல்களையும் வாழ்த்துக்களையும் நன்றியறிதலையும் தெரிவித்துக் கொள்கிறது. திருநெல்வேலிக் கிளையின் சார்பில் 5 உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாநாட்டினைச் சிறப்பித்தனர்.

தமிழக அரசு, ஓய்வூதியர்களுக்கு கூடுதல் 2% அகவிலைப் படியினை வழங்கியதற்கு இக்கிளை தனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறது.

இம்மாதம் (நவம்பர்) பிறந்த நாள் காணும் பேராசிரியர்கள் T. பார்வதி நாதன், Dr. A. தனஞ்ஜெயன் மற்றும் M. சுப்ரமணியபிள்ளை ஆகியோர் எல்லா நலங்களுடனும், மனஅமைதியுடனும் வாழ எல்லாம் வல்ல இறைவனை வேண்டி இச்சங்கம் அவர்களை வாழ்த்துகின்றது.

நவம்பர் 2018, மாதாந்திரக் கூட்டம் 08.11.2018, இரண்டாம் வியாழன் அன்று மாலை 6 மணிக்கு வழக்கம் போல் டவுண், I.O.B. யூனியன் கட்டடத்தில் நடைபெறும். உறுப்பினர்கள் அனைவரும் தவறாது கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். பேரா. M. கதிர்வேல் ஆறுமுகம் வழங்கிய இன்சுவை விருந்திற்குப்பின் பேரா. S. சங்கரநாராயணன் நன்றி கூற கூட்டம் இனிது நிறைவுற்றது.

பேரா. **தி. பார்வதி நாதன்**
செயலர், திருநெல்வேலி கிளை.





## காஞ்சிபுரம் கிளை

எமது கிளையின் பொதுக்குழு கூட்டம் 13.10.2018 சனிக்கிழமை காலை 10.00 மணியளவில் பச்சையப்பன் ஆடவர் கல்லூரியில் நடைபெற்றது வந்திருந்த உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசிய பின்னர் கூட்ட நிகழ்வுகள் எடுத்துக்கொள்ளப்பட்டன.

விவாத விபரங்களும் ஏற்கப்பட்ட தீர்மானங்களும்:

1. செப்டம்பர் மாத இயக்க நடவடிக்கைகளை செயலர் உறுப்பினர்களுக்கு தெரிவித்தார்.
2. 29.09.2018 அன்று ஈரோட்டில் நடைபெற்ற நமது இயக்கத்தின் 18வது மாநில மாநாட்டின் வெற்றியைப் பற்றியும் சிறப்பான முறையில் நடைபெற்ற விவரங்களையும் பேரா. பி. ஆர். சுப்ரமணிய சா மற்றும் பேரா. ஆர். மணி வாசகம் ஆகியோருடன் சென்று வந்த செயலர் வாயிலாக விவரித்தார். மாநாட்டின் வெற்றிக்காக மாநாட்டு ஒருங்கிணைப்பாளர்கள், விழாக் குழுவினர் கிளைப்பொறுப்பாளர்கள் உறுப்பினர்கள் ஆகியோரை இப்பொதுக்குழு பாராட்டுகிறது. ஈரோட்டு கிளை செயலருக்கு இந்த தீர்மானத்தின் நகலை செயலர் அனுப்புவது எனவும் தீர்மானிக்கப்படுகிறது.
3. 01.07.2018 முதல் அகவிலைப் படியை 7% முதல் 90% வரை உயர்த்தி வழங்கிட்ட தமிழக அரசுக்கு இப்பொதுக்குழு நன்றி பாராட்டுகிறது.
4. 01.01.2006க்கு முன் ஓய்வு பெற்று அடிப்படையாக ஓய்வூதியம் பெறும் உறுப்பினர்களுக்கு 25.10.2017 தேதியிட்ட அரசு ஓய்வூதியர்கான நிதித்துறை அரசாணை எண்.313-ல் இணைத்துள்ள விண்ணபப்படிவங்கள் வாயிலாக 06.07.2018 தேதியிட்ட உயர்கல்வித்துறையின் அரசாணை எண்.145-ன் படி திருத்தியமைக்கப்பட்ட ஓய்வூதிய உயர்வு பெற உரிய விண்ணபப்பங்கள் வழங்கப்பட்டன பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை ஓரிரு வாரங்களில் கல்லூரி முதல்வர், அறக்கட்டளை செயலர் வாயிலாக கல்லூரிக் கல்வி இணை இயக்குநரகத்து அனுப்ப உரிய செயல்முறைகள் மேற்கொள்ளப்பட்டன.
6. 2018-19 ஆம் ஆண்டிற்காக வருமான வரியை முந்தைய ஆண்டுகள் போல தவணை முறையில் நவம்பர் மாத முதல் கட்ட கருவூல அலுவலர்க்கு உரிய மனு அளித்திட முடிவு செய்யப்படுகிறது.
7. அய்ஃபெரக்டோ அமைப்பிற்கு ஆண்டு சந்தா செலுத்துமாறு உறுப்பினர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

**அடுத்த மாத கூட்டம் 14.11.2018 அன்று நடைபெறும்** என்ற அறிவிப்புடன் இணை செயலர் பேரா. ஆர். மணிவாசகம் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுற்றது.

பேரா. **இ. எம். சுப்ரமணியன்,**
செயலர், காஞ்சிபுரம் கிளை.

## புதுக்கோட்டை கிளை

கிளைப் பொதுக்குழுக்கூட்டம் 14.10.2018 ஞாயிறு காலை 11.00 மணியளவில் நடைபெற்றது. கருவூலத்தில் வழங்கப்படும். நிரந்தர அடையாள அட்டை பெறும் முறையை பேரா. S. செல்லம்மாள் அவர்கள் விளக்கினார்.

**தீர்மானங்கள்:**

1. அக்டோபர் 18-ல் பிறந்தநாள் காணும் பேராசிரியர்கள் S. சுந்தரம், S. சங்கரன், S. செல்லம்மாள், S. திருநாவுக்கரசு ஆகியோருக்குப் பிறந்த நாள் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.
2. மாநில மாநாட்டை சிறப்பாக நடத்திய ஈரோடு கிளைக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன. உதவிபுரிந்த தலைமைக் கழகத்திற்கும் வாழ்த்துக்கள்.
3. மேலைச் சிவபுரி, ஸ்ரீ கணேசர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் பணியாற்றி ஓய்வு பெற்ற பேரா. திருஞானமூர்த்தி அவர்களை உறுப்பினராகச் சேர்ப்பதற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.
4. ஈரோடு மாநில மாநாட்டுக்கு கிளைச்சார்ப்பில் முதல் நாளே ஈரோடு சென்று தங்கிய பேரா. S. திருநாவுக்கரசுக்கு விடுதி வாடகை ரூ. 1400 தர சிறப்பு அனுமதி வழங்கப்பட்டது.
5. இம்மாத கிளைக் கூட்டத்தில், இனிப்பு, காரம் தேநீர் வழங்கிய S. நாச்சியப்பன் பேரா. S. திருநாவுக்கரசுக்கு ஆகியோருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.
6. அடுத்த பொதுக்குழுக் கூட்டத்தை நம்பர் மாதம் மூன்றாம் ஞாயிற்றுக்கிழமை (18.11.18) காலை 11.30 மணியளவில் நடத்துவது என தீர்மானிக்கப்பட்டது.
7. உறுப்பினர்கள் அனைவருக்கும் தீபாவளி நல்வாழ்த்துக்கள் கிளை பொருளாளர் பேரா. S.விஸ்வநாதன் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது.

பேரா. **மணிவண்ணன்,**
செயலர், புதுக்கோட்டை கிளை.

## செய்யாறு கிளை

எமது கிளையின் மாதாந்திர பொதுக்குழுகூட்டம் 14.10.2018 அன்று காலை 10.30 மணியளவில் அரசு கலைக்கல்லூரி வளாகத்தில், கிளைத் தலைவர் பேரா. Dr. P. மோகன் குமார் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளைத்தலைவர் அனைவரையும் வரவேற்று தலைமையுரையாற்றினார்.

மாதம் ஒரு குறள் அடிப்படையில் **"வான்சிறப்பு"** எனும் அதிகாரத்தின் கீழ்வரும் குறளான,

"நெடுங்கடலும் தன்நீர்மை குன்றும்: தடிந்து எழிலி தான் நல்காது ஆகிவிடின்", என கூறி அதன் பொருளிணை நயம்பட விளக்கினார்.

இம்மாதம் மணநாள் கண்ட பேராசிரியர்கள் – 1. பேரா. Dr. R. ராஜேந்திரன் அவர்கள், 2. பேரா. A. லாசரஸ் ஞான சுந்தரம் அவர்கள். இப்பேராசிரியர்கள் இருவருக்கும் உறுப்பினர்கள் வாழ்த்தி பாராட்டினர்.

18-வது மாநில மாநாட்டினை சிறப்பாக நடத்திக் கொடுத்த ஈரோடு கிளைக்கு வாழ்த்துகளையும் பாராட்டுக்களையும் தெரிவித்தனர். சூழ்நிலைக்கேற்ப மாநாட்டு நிகழ்வுகள் திட்டமிட்டு சிறப்பாக மாநாட்டை நடத்திய ஆட்சிக்குழுவிக்குப் பாராட்டுகள். எமது கிளையில், இம்மாதம், இருவர் புதிய உறுப்பினர்களாக தங்களை இணைத்துக் கொண்டனர். 1. பேரா. Dr. தேவதாஸ் ராவ் அவர்கள், 2.C.ஞான சவுந்தரி, (செந்தட்டி காளை பாண்டியன் அவர்களின் மனைவி) உறுப்பினர்கள் இருவரையும் வரவேற்று பாராட்டினர் இம்மாத கூட்டத்தில், மதுரை மாவட்ட கிளையின் உறுப்பினர் பேரா. பாண்டியன் அவர்கள், கலந்து கொண்டு சிறப்பித்தார்.





பொருளாளர் பேரா. L. குப்புசாமி அவர்கள் 18வது மாநில மாநாட்டில் கலந்து கொண்ட உறுப்பினர்களுக்கு ஆன செலவுகள், நிதிநிலை தொடர்பான அறிக்கையினை அவையில் வைத்ததுடன் கிளையின் நிதிநிலை சிறப்பாக உள்ளதாக பெருமையுடன் கூறினார்.

இறுதியில் கிளைத்துணைத்தலைவர் பேரா. Dr. அஞ்சப்பன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறியதுடன், பொதுக்குழு இனிதே நிறைவடைந்தது.

பேரா. **வேணு. சிவப்பிரகாசம்,**
செயலர், செய்யாறு கிளை

## கிருஷ்ணகிரி கிளை

எங்கள் கிளையின் அக்டோபர் மாதக் கூட்டம் 13.10.2018 அன்று மாலை 5 மணியளவில் கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகில் உள்ள ஹோட்டல் ஆரியபவனில் நடைபெற்றது.

கிளையின் தலைவர் பேரா. வெங்கடேச குப்தா தலைமை தாங்கினார். செயலாளர் அனைவரையும் வரவேற்றார்.

29.09.2018ல் ஈரோட்டில் நடைபெற்ற நமது கழகத்தின் மாநில மாநாடு பற்றி கிளைச்செயலாளர் விவரித்தார். நம் கிளையின் சார்பாக கிளைச் செயலாளரும் மற்றும் நான்கு பேராசிரியர்களும் (பேரா. K.M. மணி, பேரா. K. அரங்கசாமி, பேரா. C. ரங்கா ராஜ் மற்றும் பேரா. D. ஜெயக்குமார்) கலந்து கொண்டனர். மாநாடு மிகவும் சீரும் சிறப்புடனும் நடைபெற்றது. ஈரோடு TANRECTA கிளைப் பொறுப்பாளர்கள் மிகவும் சிறப்பான முறையில் மாநாட்டுத் தயாரிப்புக்களைச் செய்திருந்தனர். மாநாட்டு நிகழ்ச்சிகள் தொடர்ந்து நடைபெற்றன. தேனீர் மற்றும் மதிய உணவு சொல்லத்தக்க வகையில் நன்றாக இருந்தன என்று செயலாளர் மாநாடு பற்றிக் கூறினார்.

எங்கள் கிளை மாநாடு நல்லமுறையில் நடைபெற அனைத்து ஏற்பாடுகளையும் செய்து கொடுத்த ஈரோடு கிளைக்கு நன்றியையும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கிறது.

தலைவர் பேரா. B.B வெங்கடேச குப்தா யூ.ஜி.சி ஊதியத்தின் அடிப்படையில் பென்சன் திருத்தம் கல்லூரியில் செய்கிறார்கள் என்றும் இந்தவாரத்தில் கருவூலத்திற்கு அனுப்பிவைக்கப்படும் என்றும் கல்லூரி முதல்வர் கூறியதாகக் கூறினார்.

மாநாடு சென்றுவந்த செலவு விவரங்களை செயலாளர் பொதுக்குழுவில் சமர்ப்பித்தார். அதனைப் பொதுக்குழு முழுமையாக ஏற்றுக் கொண்டது.

இந்த மாதம் பிறந்த நாள் கொண்டாடும் பேரா. B.R. வெங்கடேச குப்தா, பேரா. G. பெருமாள் மற்றும் தங்கள் திருமண நாளைக் கொண்டாடும் பேரா. K. அப்துல் சதார், பேரா. முனைவர் S. சேதுராம கிருஷ்ணன் மற்றும் பேரா. முனைவர் S. மூர்த்தி அவர்களுக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

பிறந்த நாள் மற்றும் திருமண நாள் கொண்டாடும் பேராசிரியர்கள் இணைந்து நல்ல சிற்றுண்டியும் தேநீரும் வழங்கினர். கிளையின் பொருளாளர் பேரா. K. வேலுசாமி அனைவருக்கும் நன்றி கூறினார். இத்துடன் கூட்டம் நிறைவுற்றது.

பேரா. **அற்புதமணி,**

செயலர், கிருஷ்ணகிரி கிளை.

**ஈரோடு கிளை**

ஈரோடு கிளையின் மாதாந்திர பொதுக்குழுக் கூட்டம் கடந்த 13.10.2018 அன்று காலை 10.30 மணிக்கு ஈரோடு ஒற்றுமை அரங்கில் சிளைத்தலைவர் முனைவர் பேரா. K. R. பரமசிவம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு வருகை புரிந்த பேராசிரியர்களை கிளைச் செயலர் பேரா. M. கோபாலசாமி வரவேற்றார். மாநில அளவில் கடந்த 29.9.2018 அன்று பெருந்துறை சாலையில் அமைந்துள்ள குருசாமிக் கவுண்டர் திருமண அரங்கில் நடைபெற்ற TANRECTAவின் 18வது மாநில மாநாடு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. இந்த நிகழ்வு சாத்தியமாவதற்கு ஈரோட்டில் உள்ள பலரும் உதவியுள்ளனர். முதலாவதாக குருசாமிக் கவுண்டர் திருமண அரங்கை இத்தகைய மாநாட்டிற்கு அடிப்படை கட்டணத்துடன் வாடகை எதுவுமில்லாமல் கொடுத்து உதவி புரிந்த திருமண அரங்கு உரிமையாளர்கள் திரு. காளியண்ண கவுண்டர் மற்றும் திரு. மோகன் ராம கிருஷ்ணன் ஆகிய இருவருக்கும் நன்றி கூறிக் கொள்கின்றோம். ஈரோடு கிளை பொறுப்பாளர்களில் பேரா. B. பிரபாகரன் அவர்களுக்கும் பேரா. M. கோபாலசாமி அவர்களுக்கும் மாநாடு முடிந்த பின்னர் வந்த தொலைபேசி மற்றும் கைபேசி அழைப்புகள் மூலம் மற்றும் கடிதங்கள் வாயிலாகவும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் TANRECTAவின் கிளைப்பொறுப்பாளர்கள் வாழ்த்தியது எங்களால் என்றுமே மறக்க முடியாத ஆகும்.

இந்த நிகழ்வினை இனிதே செயல்படுத்த கிளை உறுப்பினர்களின் முழுமையான ஒத்துழைப்பே அடிப்படை காரணமாகும். கிளைப்பேராசியர்கள் பல குழுக்களில் இடம்பெற்று அவரவருக்கு இட்டபணியினை சிரமேற்கொண்டு செய்து முடிந்ததை வார்த்தைகளால் விவரிக்க இயலாது. AUT அமைப்பின் மேனாள் தலைவர் பேரா. N. செந்தாமரை அவர்கள் தொடர்ந்து அளித்த ஒத்துழைப்பிற்கு நன்றி. அமைச்சர்களை அழைக்கச் சென்றது முதல் அவர்களுக்கு அழைப்பிதழ் வழங்கும் வரை அவர் ஆற்றிய பணி பாராட்டுதலுக்கு உரியது. மிக அதிகமாக விளம்பரங்களையும் அவர் பெற்றுத்தந்தார். ஈரோடு சிக்கய்ய நாயக்கர் கல்லூரியைச் சார்ந்த தமிழ்துறையில் பணிபுரிந்து வரும் முனைவர் கமலக்கண்ணன் மற்றும் பேரா. வேணு கோபால் மற்றும் துறை சார்ந்த பேராசிரியர்கள் ஆற்றிய உதவியை மறக்க இயலாது. அவர்களுக்கு நன்றி.

எங்களுக்கு மாநாட்டினை ஆரம்பம் முதல் இறுதி வரை தொடர்ந்து ஒத்துழைப்பையும் ஊக்கத்தையும் அளித்திட்ட TANRECTA அமைப்பின் மையப்பொறுப்பாளர்களில் தலைவர், பொதுச் செயலர், முனைவர் மாரிசாமி முனைவர் ராஜகோபால் போன்றோர் செய்த உதவிகள் மறக்க இயலாது.





பேரா. முனைவர் S. ஜெயசங்கர், முனைவர் K. கடம்பவனம், பேரா. K. செந்தாமரைக் கண்ணன், பேரா. N. கோகுல சந்தான கிருஷ்ணன் Captain D. ஆறுமுகம் போன்றோர். இரவு பகல் பாராது உழைத்ததை நன்றியுடன் பார்க்கின்றோம். பேரா. மணி மற்றும் ஈரோடு கலைக் கல்லூரி பேராசிரியர்கள் பலரும் அதிலும் குறிப்பாக முனைவர் S. ராமசாமி ஆகியோர் நமது கிளைப்பொருளாளர் பேரா. B. பிரபாகரன் அவர்களுக்கு உறுதுணையாக நின்று நிதியினை திரட்டினர். பலரது இல்லங்களுக்கு நேரிடையாக சென்று நதியினை திரட்டியது பாராட்டுக்குரியது ஆகும்.

ஸ்ரீ வாசவி கல்லூரியில் தற்சமயம் பணிபுரிந்து வரும் Dr. தாமரைக் கண்ணன், Dr. நியாசுதீன், Dr. மாணிக்கம், Dr. ராஜகோபால் போன்றோர் ஆற்றிய பணியினை மறக்க முடியாது. NCC மாணவர்கள் (ஸ்ரீவாசவி கல்லூரி சார்ந்து) ஆற்றிய பணியினை வார்த்தைகளால் விவரிக்க முடியாது. இவர்கள் அனைவருக்கும் நன்றி.

ஈரோடு கலைக்கல்லூரி பேராசிரியர்கள் முனைவர் சாத்தப்பன், முனைவர் பன்னீர் செல்வம், முனைவர் பசுபதி ஆகியோர்களுக்கு உதவி செய்ததை மறக்கமுடியாது.

எங்களுக்கு நிதி உதவியும் செய்து மாநாட்டிற்கு வந்திருந்த கிளைப் பேராசிரியர்கள் அனைவருக்கும் நன்றி. பேராசிரியை கண்ணாயம்மாள் முனைவர் சரஸ்வதி மணியன் ஆகியோருக்கும் நன்றி.

கடந்த 9.10.2018 அன்று பொருளாளரும் செயலரும் கோவை பேராசிரியர் முனைவர் ராஜகோபாலுடன் இணைந்து சென்று கோவை RJD அவர்களையும் கோவை கருவூல அதிகாரியையும் சந்தித்து பேசி வந்தனர்.

இம்மாதம் பிறந்த நாள் காணும் பேராசிரியர்கள் பெயர்கள் வாசிக்கப்பட்டு வாழ்த்து கூறப்பட்டது.

**இரங்கல் தீர்மானம்:**

1. நமது கிளை உறுப்பினரும் நமது மாநாட்டிற்கு பல உதவிகளையும் செய்து தந்த திருச்செங்கோடு செங்குந்தர் பொறியியல் கல்லூரியின் தாளாளர் A. பாலதண்டபாணி அவர்களின் தாயார் ராஜாமணி அம்மாள் கடந்த 28.09.2018 அன்று காலமாகிவிட்டார்.
2. நமது கிளை உறுப்பினரும் சிக்கய்ய நாயக்கர் கல்லூரியின் மேனாள் முதல்வருமான பேரா. பாஸ்கரன் அவர்களுடைய பேரக்குழந்தை விபத்தில் மரணமுற்றது.
3. நமது கிளை உறுப்பினரும் சிக்கய்ய நாயக்கர் மற்றும் ஸ்ரீவாசவி கல்லூரி மற்றும் BEd., கல்லூரிகளில் பணியாற்றிய பேரா. தங்கவேலு (ஆங்கிலத்துறை) மரணமடைந்து விட்டார். இந்த மூவருக்கும் மௌன அஞ்சலி மூலம் இரங்கல் தெரிவிக்கப்பட்டது. மாநாட்டின் சிறப்பான செயல்பாடு பற்றி பாரதியார் பல்கலைக் கழகத்தின் மேனாள் பதிவாளர் பேரா. P.N. சிலம்பண்ணன் அனைவரையும் வாழ்த்திப் பேசினார். அவருக்கு நன்றி. பேரா. B. பிரபாகரன் அவர்கள் மாநாடு நடைபெற்ற விதம் பற்றியும் பலருடைய உதவிகள் பற்றியும்

விளக்கமாகப் பேசினார். இன்றைய கூட்டத்தில் ஈரோடு சாய் குருஸ்தான் அமைப்பிற்கு ரூ. 10,000/- நிதி உதவி (பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதி வழங்கப்பட்டது. அடுத்த நிறுவனத்திற்கு சில தினங்களில் நிதி அளிக்கப்பட உள்ளது. ஈரோடு மாநாட்டினை ஒரு வெற்றி மாநாடாக மாற்றிய அனைத்து பேராசிரியர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றி.

**எமது கிளையின் கூட்டம் வழக்கம்போல் 10.11.2018 அன்று நடைபெறும்.** மாநாட்டிற்கு சிறப்பான உணவினை ஏற்பாடு செய்த குழு மற்றும் அறுசுவை உணவினை தயாரித்த HARI GROUPக்கு பாராட்டும் நன்றியும் கூறப்படுகின்றது.

பேரா. **M. கோபாலசாமி**
செயலர், ஈரோடு கிளை.

## விருதுநகர் கிளை

விருதுநகர் கிளையின் பொதுக்குழுக் கூட்டம் 13.10.2018 முற்பகல் 11.00 மணியளவில் விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V. இராமசாமி நாடார் திருமண அரங்கில் கிளைத்தலைவர் முனைவர் N. இன்பமணி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவரையும் தலைவர் வரவேற்று தலைமையுரையாற்றினார், கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1. இம்மாதம் பிறந்தநாள் காணும் நமது கிளையின் 9 உறுப்பினர்களை அவர்கள் மேலும் பல்லாண்டுகள் வாழ இக்கிளை அவர்களை வாழ்த்துகிறது.
2. TANRECTAவின் 18-வது மாநில மாநாட்டை மிகவும் சிறப்பாக நடத்திய TANRECTA ஈரோடு கிளை உறுப்பினர்களுக்கும் கிளை பொறுப்பாளர்களுக்கும் இக்கிளை நன்றியும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறது.
3. அனைத்து TANRECTA உறுப்பினர்களுக்கும் இக்கிளை இனிய தீபாவளி நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.
4. கிளைப் பொருளாளர் அவர்கள் இம்மாதம் TANRECTA கட்டிட நிதி வழங்கிய உறுப்பினர்களின் பெயர்களையும் அவர்கள் அளித்த தொகையும் வாசிக்க கூட்டத்தில் அவர்களுக்கு நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவிக்கப்பட்டது. சென்ற மாத தொடர்ச்சி தலா ரூ 7000/. நிதி அளித்த அன்பர்கள் விருதுநகர் VVV மகளிர் கல்லூரி 85. Dr.S. பரிமளா. சிவகாசி ANJA கல்லூரி 86. Dr.C.வினாயக சுந்தரம்..... தொடரும்.
5. கேரளா வெள்ள நிவாரண நிதி தலா ரூ 1000/. அளித்த Prof. R.ஜெயராமன் Prof. ஆவுடைத்தாய் ஜெயராமன் தம்பதியருக்கு இக்கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.
6. கூட்டத்திற்கு வந்திருந்த அனைவருக்கும் தனது பிறந்த நாளை ஒட்டி நல்லதொரு மதிய விருந்தினை அளித்து மகிழ்ந்த பேரா.C.R. சந்திரசேகரன் அவர்களை இக்கிளை நன்றி கலந்த பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறது.
7. பேரா. நரசிங்கம் அறக்கட்டளையிலிருந்து இக்கிளைக்கு ரூ 20000/- நிதி வழங்கிய அறக்கட்டளை பொறுப்பாளர்களுக்கும், TANRECTA மையப் பொறுப்பாளர்களுக்கும் இக்கிளை நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.





8. உறுப்பினர்கள் ஈரோட்டில் நடைபெற்ற 18- வது மாநாட்டிற்கு சென்று வந்த சிலவு கணக்குகளை துணைத்தலைவர் பேரா.S.கருப்பையா அவர்கள் சமர்ப்பித்தார், பொதுக்குழு அவர் சமர்ப்பித்த கணக்கை ஏற்று ஒப்புதல் அளித்தது.
9. பேரா.S.கருப்பையா அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுற்றது.

**அடுத்த மாதக் கூட்டம் 10.11.2018 இரண்டாம் சனிக்கிழமை அன்று முற்பகல் 11.00 மணிக்கு விருதுநகர் பாண்டியன் நகர் சடுகுடுக்கா வகையறா V.இராமசாமி நாடார் திருமண அரங்கில் நடைபெறும்.**

**திருத்தம்:** சென்ற TANRECTA இதழில் பக்கம் 45-ல் கேரளா வெள்ள நிவாரணநிதி வழங்கிய உறுப்பினர்களில் No.4 பேரா. சில்வியா ஜெயச்சந்திரன் என்பதே சரி, தவறுக்கு வருந்துகிறோம்.

பேரா. **V.ஹரிராஜன்**
செயலர், விருதுநகர் கிளை.

## வேலூர் கிளை

வேலூர் கிளையின் அக்டோபர் மாதக் கிளைக் கூட்டம், 09.10.2018 மாலை 5.00 மணிக்குக் கிளைத் துணைத் தலைவர் தலைமையில் வேலூர் ஆசிரியர் இல்லத்தில் நடந்தது. கிளைச் செயலர் அனைவரையும் வரவேற்றார்.

அக்டோபர் மாதம் பிறந்த நாள் காணும் மூன்று பேராசிரியர்களுக்கு வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன. முனைவர். V. தன சேகரன், முனைவர் காந்த லட்சுமி மற்றும் பேரா. கேசவ ரெட்டி ஆகியோர் நல்ல உடல் நலத்துடன் நீண்ட நாள் வாழ, பாராட்டுக்கள் தெரிவிக்கப்பட்டன. வேலூர் DKM கல்லூரியில் பணியாற்றி ஒய்வுபெற்ற பேராசிரியை J. ரேவதி, வேலூர் கிளையில் தங்களைப் புதிய உறுப்பினராக இணைத்துக் கொண்டுள்ளார்கள்.

ஈரோட்டில் 29.09.2018 இல் நடந்த 18-வது மாநில மாநாட்டில் வேலூர் கிளையிலிருந்து பதினாறு உறுப்பினர்கள் பங்கேற்றுச் சிறப்புச் செய்தார்கள். அவர்கள் அனைவருக்கும் கிளைச் செயலர் நன்றி பாராட்டினார். அடுத்த மாநாடுகளில் அதிக உறுப்பினர்கள் பங்கேற்றுச் சிறப்புச் செய்யவும் வேண்டுகோள் விடுத்தார். ஈரோட்டில் நடைபெற்ற மாநாடு சிறப்பாக நடந்ததற்கு உதவிய அனைவர்க்கும் கிளை பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

2006 க்கு முன் ஒய்வு பெற்ற உறுப்பினர்கள், புதிய ஒய்வூதியப் படிவங்களைப் பூர்த்தி செய்து வழங்காதவர்கள், விரைந்து அனுப்புமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள். கிளைப் பொருளர் நன்றியுரைக்குப்பின், சிற்றுண்டி வழங்கப்பட்டது.

**நவம்பர் மாதக் கூட்டம், வேலூர் ஆசிரியர் இல்லத்தில் 13.11.2018, மாலை 5.00 மணிக்கு நடைபெறும்.**

பேரா. **மு. குருசாமி**
செயலர், வேலூர் கிளை

## பொள்ளாச்சி கிளை

எமது கிளையின் பொதுக்குழு கூட்டம் 14.10.2018 அன்று காலை பொள்ளாச்சி ந.க.ம. கல்லூரியில் நடைபெற்றது. கிளைத் தலைவர் பேராசிரியர் முனைவர் P. சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்கள். கிளைச் செயலாளர் முனைவர் M.இராமச்சந்திரன் அவர்கள் வருகை புரிந்த அனைத்து உறுப்பினர்களையும் வரவேற்று, கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இம்மாத பிறந்த நாள் காணும் நமது கிளையின் உறுப்பினர்கள் :-

1. 1. பேராசிரியர் R.பத்ம நாபன், 2.பேராசிரியர் P.R. கதிரேசன், 3.பேராசிரியர் K.பூமா, 4.பேராசிரியர் R.தேவ ராஜன் ஆகியோர்களை மேலும் பல்லாண்டு வாழ இக்கிளை வாழ்த்துகிறது.
2. கூட்டத்திற்கு வருகை தந்த அனைவருக்கும் இனிப்பு, காரம் மற்றும் தேநீர் வழங்கிய, பிறந்த நாள் காணும் நான்கு பேராசிரியர்களுக்கும் இக்கிளை நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.
3. பேராசிரியர் கோபால்சாமி அவர்கள் கேட்டு கொண்டதிற்கிணங்க கிளை உறுப்பினர் யாரேனும் இயற்கை எய்தினால் அருகாமையில் இருக்கும் உறுப்பினர்கள் அனைவரும் சென்று அஞ்சலி செலுத்துவது என்றும், கிளை பொறுப்பாளர்கள் மலர் வளையம் வைத்து குடும்பத்தார்க்கு ஆழ்ந்த இரங்கலை தெரிவிப்பது என்றும் தீர்மானிக்கப் பட்டது.
4. 1980-1985 வரை பணியமர்த்தப்பட்ட உதவிப் பேராசிரியர்கள் மொத்தப் பணிக்காலத்தை கணக்கில் கொண்டு பணி மேம்பாடு, மற்றும் உயர்துவக்க ஊதியம் Rs 14,940 அனுமதித்து அரசு கல்லூரி ஆசிரியர்களுக்கு மட்டும் ஆணைகள் வழங்கயுள்ளது. இதை அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு விரிவுபடுத்தி ஆணை வழங்க வேண்டுமென அரசையும், கல்லூரிக் கல்வி இயக்குனர் அவர்களையும் கேட்டுக் கொள்வதென தீர்மானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக மாநிலத் தலைமை நடவடிக்கை மேற்கொண்டு, அரசு உதவிபெறும் கல்லூரி ஆசிரியர்களுக்கு உயர் துவக்க ஊதியம் பெற்றுத்தர வேண்டுவது என தீர்மானிக்கப்பட்டது.

எமது கிளையில் கீழ்க்கண்ட ஒய்வுபெற்ற பேராசிரியர்கள் புதிய உறுப்பினர்களாகச் சேர்த்துள்ளனர் என்பதை மகிழ்வுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

(NGM College, பொள்ளாச்சி) 1. முனைவர் P.R.பால சுப்ரமணியன், 2.பேராசிரியர் V. சுசிலா, 3.பேராசிரியர் K. கந்தசாமி, 4.முனைவர் ஸ்ரீமன் பத்ரி நாராயணன், 5.முனைவர் P. கலாமணி, 6.முனைவர் A.L. கமலவல்லி, 7.பேராசிரியர் ஆனந்த பரமேஸ்வரி.

(G.V.G. College உடுமலைப் பேட்டை ) 8.பேராசிரியர் S.லட்சுமியம்மாள், 9.பேராசிரியர் N.சீனியம்மாள்.

இறுதியில் கிளையின் பொருளாளர் பேராசிரியர் A. பால கங்காதரன் அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவடைந்தது. **அடுத்த கூட்டம் வருகின்ற நவம்பர் மாதம் 11.11.2018 ஞாயிறு காலை 11 மணியளவில்**





**ந.க.ம. கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.** உறுப்பினர் கட்டணம் செலுத்துவோர் கிளையின் வங்கிக் கணக்கில் செலுத்தி விபரத்தை செயலாளர்/ பொருளாளருக்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகிறது. நேரிலும் செலுத்தலாம். இந்தியன் ஒவர்சீஸ் வங்கி, IOB, NGM College Branch, Pollachi A/c-170101000008755, IFSC-IOB A0001701.

முனைவர் **மு. இராமச்சந்திரன்,**
செயலர், பொள்ளாச்சி கிளை.

## பழனிக்கிளை

பழனிக் கிளையின் அக்டோபர் மாதக் கூட்டம் 9.10.2018 செவ்வாய் மாலை 5.30 மணிக்கு நளபாகம் விழா அரங்கில் நடைபெற்றது. துணைத்தலைவர் பேராசிரியர் S. இரத்தின சபாபதி தலைமையேற்றார். பேராசிரியர் P. கருணாநிதி இறையருள் பாடல் இசைத்திடக் கூட்டம் இனிதே தொடங்கியது.

**அஞ்சலி: பழனிக் கிளையின் மதிப்புமிக்க உறுப்பினர் P.இராஜகோபாலின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தி இரண்டு நிமிடம் அமைதி காத்து நின்றோம்.**

மிகச் சிறந்தப் பண்பாளர்; பழகுதற்கினியவர் என்று பேராசிரியர் R. பாஸ்கரன் புகழ்ந்துரைந்தார். அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் பயிலும் காலம் தொட்டே நட்பு பாராட்டி வந்த நிகழ்வுகளை மைய மன்ற இணைச் செயலர் பேராசிரியர் S. சிவ சண்முகம் நினைவு கூர்ந்தார்.

**பிறந்த நாள் காணும் பேராசான்கள்:**

அக்டோபர் தினங்களில் பிறந்த நாள் கதனும் பேராசான்கள் கோமதி K. சிவன், காமாட்சி பாலசுப்பிரமணியன், V.K.ரவி, S.நாகலிங்கம், M.நாகராஜன் ஆகியோரை வாழ்க வளமுடன் என வாழ்த்திப் பேசினார் துணைத் தலைவர்.

**18 வது மாநில மாநாடு:** 29.9.2018-ல் நடைபெற்ற நம் 18-வது மாநில மாநாட்டு ஏற்பாடுகளைத் திறம்படச் செய்துயர்ந்தனர் ஈரோட்டுக் கிளைப் பேராசான்கள். பழனிக்கிளை உங்களைப் பாராட்டி மகிழ்கிறது.

பழனிக் கிளையின் 30 பேராளர்கள் ஈரோட்டு மாநாட்டில் பங்கேற்றனர். தனியொரு வேனில் பயணித்து நிகழ்ச்சிகளில் முழுமையாகப் பங்கேற்றோம். தனித்தனியாகவும் நம் கிளைப் பேராசான்கள் வந்து சேர்ந்திருந்தனர். பாங்குறப் பங்கேற்று, நம்மை மகிழ்வித்து உரை நிகழ்த்தியத் தமிழ்நாடு கருவூலத்துறை உயர் அதிகாரி மேன்மைமிகு தென்காசி ஜவஹரின் வருகையால் ஆறுதலுற்றோம்.

**தீர்மானங்கள்:**

1. மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள அனைத்துத் தீர்மானங்களும் நம் எதிர்பார்ப்பையும், ஏக்கத்தையும் வெளிப்படுத்துகின்றன. 'ஒய்வு பெற்றோருக்கு வருமான விலக்கு' -மிக நியாயமான கோரிக்கை நிறைவேறட்டும்.
2. பழனிக் கிளையின் நீண்டகாலப் பொருளாளர் பேராசிரியர் S.பழனிச்சாமி எண்பதாண்டுகள் அகவை மூத்தார் எனப் பாராட்டிப் பொன்னாடை போர்த்தி கௌரவித்தனர். பழனிக் கிளையும் அவரை வாழ்த்துகிறது.
3. பழனிக் கிளையின் வேண்டுகோளையேற்று பேராசிரியர் அரங்க நரசிங்கம் அறக்கட்டளையினர் பழனியருகேயுள்ள 'கோகுலம்' மனநலம் குன்றியோர் காப்பகத்திற்கு ரூ 10,000/- நிதியளித்துள்ளனர்.

4. தமிழ்நாடு அரசாணை 145-ன் படி 2006 ஆம் ஆண்டுக்கு முன்னர் ஒய்வு பெற்றப் பேராசிரியர்களுக்கு பல்கலைக் கழக மான்யக் குழுவின் ஒய்வூதியத்திருத்தப் பண உயர்வு பெறுவதில் காலம் நீடிக்கிறது. உரிய படிவங்களைப் பூர்த்தி செய்து காத்திருக்கின்றனர். நிதித்துறையும், கல்வித்துறையும் வழிகாட்டிட நம் ஆட்சிக் குழுவினர் ஆவன செய்திடுக.
5. மாநாட்டு மலருக்கு விளம்பரங்கள் கொடுத்துதவிய பழனிக் கிளை உறுப்பினர்களைப் பாராட்டுகிறோம்.
6. மைய மன்றப் பொருளாளர் பேராசிரியர் M.பாலசுப்ரமணியனுக்குப் பழனிக் கிளையின் சந்தாத் தொகை ரூ.17050.00(ரூபாய் பதினேழாயிரத்து ஐம்பது ரூபாய்கள் மட்டும்) முதல் தவணையாக அனுப்பியுள்ளோம்.

விபரம் : 1. 11 உறுப்பினர்களின் சந்தா ரூ (11x150) 1650.00 1650.00

2.7 உறுப்பினர்களுக்கு இதழ் சந்தா ரூ (7x200) 1400.00 1400.00

3.14 உறுப்பினர்களுக்கு AIFRUCTO மற்றும் வாழ்நாள் உறுப்பினர் சந்தா-(14x1000)14000.00

இரண்டாவது தவணையாகப் பேராசிரியர் N.மாரிசாமி அளித்துள்ளக் கட்டிட நிதி ரூ 7000.00 மும் மற்றும் இதர நிதிகளும் அனுப்பப்படும்.

7. 76 உறுப்பினர்களுள்ள நம் பழனிக் கிளையில் 56 உறுப்பினர்கள் AIFRUCTO வாழ்நாள் உறுப்பினர்களாகியுள்ளனர். பதிவு தொடரும் விரைவில் 100 சதத்தைப் பூர்த்தி செய்வோம்.

பழனிக் கிளையின் இணைச்செயலாளர் பேராசிரியை மரகதம் சிவானந்தம் நன்றி உரைத்திடக் கூட்டம் இனிதே நிறைவுற்றது. **நவம்பர் மாதக் கூட்டம் 13.11.2018 செவ்வாய் பகல் 11.30 மணிக்கு நளபாகம் விழா அரங்கில் நடைபெறும்.**

பேரா. **துரை சுந்தர மூர்த்தி**
செயலர், பழனிக்கிளை.

### கோவை- நீலகிரி கிளை

இக்கிளையின் கூட்டம் 13.10.18 சனிக்கிழமை மாலை 4.30 க்கு கோவை அரசு கலைக் கல்லூரியில் கிளைத் தலைவர் முனைவர் மு.சக்கரபாணி தலைமையில் நடைபெற்றது. தலைவர் உறுப்பினர்களை வாழ்த்தி வரவேற்றார்.

**இரங்கல்:**

1. கோவை அரசு கலைக் கல்லூரியில் பயின்று பட்டம் பெற்றவுடன் தமிழ்த் துறையில் பயிற்றுனராகப் பதவி பெற்று பணியாற்றியபின் உதகை அரசு கல்லூரிக்கு மாறுதல் பெற்று பயிற்றுனர் மற்றும் பதவி உயர்வு பெற்று தமிழ் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றிய பேராசிரியர்.க.ஆறுமுகம் அவர்கள். பின்னர் கோவை அரசு கல்லூரியில் பேராசிரியராகப் பணியாற்றி ஒய்வு பெற்றார்,அவர் நோய்வாய்பட்ட நிலையில் கடந்த 8.10.18 அன்று மரணம் அடைந்தார்கள். அவர் நம் கிளையின் உறுப்பினர் ஆவார்.
2. கோவை பூ.ச.கோ கலைக் கல்லூரியில் இயற்பியல் துறையில் பணியாற்றி ஒய்வு பெற்று நம் கிளை உறுப்பினராக உள்ளவர் பேரா.சின்னசாமி. அவர்





தாயார் தம் 94 ஆம் வயதில் மரணம் அடைந்தார் என்ற செய்தி கிடைத்தது. இந்த இருவருக்கும் இரங்கல் தெரிவிக்கும் வகையில் உறுப்பினர்கள் எழுந்து நின்று இரண்டு நிமிடம் மவுன அஞ்சலி செலுத்தினர்.

பேரா.க.ஆறுமுகம் அவர்களின் நல் இயல்புகளைத் தலைவர் எடுத்துக் கூறினார். இருதயம் அறுவை சிகிச்சை செய்யப்பெற்று மருத்துவ பராமரிப்பில் இருந்துவரும் பேராசிரியர். முனைவர் S.மைக்கேல் ஜோசப் மற்றும் அவர் துணைவி திருமதி ஜெயசீலி ஆகிய இருவரும், மற்றும் மூச்சுத்திணறல் காரணமாக மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ கண்காணிப்பில் இருந்து வரும் பேராசிரியர்.முனைவர் G.S.சங்கரன் அவர்களும் உடல் நலம் பெற்று விரைவில் குணமடைய உறுப்பினர்கள் வாழ்த்து தெரிவித்தனர்.

அடுத்து 29.9.18 ஈரோட்டில் நடைபெற்ற நம் கழக மாநாடு பற்றி தலைவர் விவரித்தார். மிக சிறப்பான முறையில் ஏற்பாடுகள் செய்து இருந்ததையும், உறுப்பினர்கள் மகிழும் வண்ணம் உணவு முதலியன வழங்கியதையும் கூறி, கிளைப் பொறுப்பாளர்கள் தலைமைக் கழகத்தினருடன் இணைந்து அதிக உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்க செய்ததையும் கூறி பாராட்டினார். கோவை கிளை சார்பில் 64 உறுப்பினர்கள் கலந்து கொண்டு மாநாட்டை சிறப்பித்துள்ளார்கள். மற்ற கிளைகளை விட அதிக எண்ணிக்கையில் கலந்து கொண்டதற்கும், அதிக அளவில் விளம்பரங்கள் (30) கொடுத்து (ரூ 43,600) முதலிடம் பெற்றதையும் கூறி, இந்த சிறப்பினைப் பெற்றுத் தந்த உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றியும் வாழ்த்தும் கூறினார்.

பின்னர் ஒய்வூதிய திருத்தம் பெற கிளை சார்பில் (Pension Revision) செய்துவரும் முயற்சி பற்றி விளக்கினார்.RJD அலுவலகம் சென்று RJDயை சந்தித்து பேசியதையும், கல்லூரிமுதல்வர் மற்றும் நிதியாளரையும் சந்தித்து விரைந்து நிலுவை பெற ஆவன செய்ய வேண்டியதையும், கருவூலம் சென்று இணை கருவூல அலுவலரைச் சந்தித்து பேசியதையும் எடுத்துக் கூறினார்.

கீழ்க்கண்ட பேராசிரியர்கள் கிளையின் புதிய உறுப்பினர்களாக தாங்களைப் பதிவு செய்து கொண்டனர்;

1.முனைவர் B.ராஜாராம் (Botany, PSGCAS), 2.பேராசிரியர்.K. பிரகாசம் (Statistics PSGCTS), 3.பேராசிரியர்.V.N.சடகோபன்(Bio-Chem, PSGCAS), 4.பேராசிரியர்.திருமதி P.புஷ்பா,(SRC, Tiruchi), 5.முனைவர் G.சுகுணா (Commerce GVGC உடுமலை), 6.பேராசிரியர் S.ஆண்டாள், (Maths, GTN College, திண்டுக்கல்) இவர்களை தலைவரும் உறுப்பினர்களும் வரவேற்று வாழ்த்து கூறினார்.

அடுத்து மாநிலத்துணைத் தலைவர் முனைவர் M.ராஜகோபால் ஒய்வூதிய திருத்தம் பெற தலைமைக் கழகம் எடுத்து வரும் செயல்பாடுகள் பற்றிக் கூறினார். கல்லூரிக் கல்வி இயக்குநர், கணக்கு மற்றும் கருவூலத்துறை ஆணையர் அலுவலகம் சென்று உறுப்பினர்கள் நிலுவை பெற எடுத்துவரும் தொடர் முயற்சி பற்றியும் கூறினார். பின்னர் கல்லூரிக் கல்வி இயக்குநர் அனுப்பியுள்ள ஆணையின்படி 1980 முதல் 1985 வரையிலான காலத்தில் பணி நியமனம் பெற்ற பேராசிரியர்களுக்கு உயர் ஊதியம் (ரூ 14,940) வழங்க எவ்வாறு விண்ணப்பிக்க வேண்டும் என்பன போன்றவற்றை உறுப்பினர்களுக்கு விளக்கினார்.

அடுத்து இந்த மாதம் பிறந்த நாள் காணும் உறுப்பினர்களின் பெயர்களைப் படித்து இணைச் செயலர் G.சங்கமேஸ்வரன் வாழ்த்து கூறினார். உறுப்பினர்களும் வாழ்த்தினர், இவர்களில் கீழ்கண்ட பேராசிரியர்கள் உறுப்பினர்களுக்கு இனிப்பு, காரம், தேநீர் வழங்கி மகிழ்ந்தனர்.

முனைவர் காந்தி சுப்பிரமணியன், N.சாமியப்பன், SP. பழனிசாமி, K.K.பொன்னுசாமி, முனைவர் K.சுப்பிரமணியன் (பொருளாளர்) முனைவர் T.சீனுவாசன், M.P.பால தண்டபாணி, R.எத்திராஜீலு மற்றும் திருமதி கமலா கணேசு ஆகியோர்.

ஈரோட்டில் நடந்த மாநாட்டில் நம் கிளை சார்பில் 80 ஆண்டுகள் நிறைவுபெற்ற முனைவர் A.சண்முக சுந்தரம், முனைவர் P.முத்துசாமி, இருவருக்கும் கணக்கு மற்றும் கருவூலத்துறை ஆணையர் திரு.தென்காசி சு.ஜவகர் IAS அவர்கள் பொன்னாடை போர்த்தி சான்றிதழ் வழங்கி வாழ்த்தினார். நாமும் மீண்டும் நம் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

பேரா. C.S.பால சுப்ரமணியன் வடபுலம் சென்று, பல தெய்வதிருத்தலங்களில் வழிபாடு செய்து நலமுடன் திரும்பியதற்கு உறுப்பினர்களுக்கு சிறப்பு இனிப்பு வழங்கினார், அவருக்கு நன்றியும் வாழ்த்தும். பொருளாளர் முனைவர் K.சுப்பிரமணியன் நன்றி கூற கூட்டம் நிறைவு பெற்றது. உறுப்பினர்களுக்கு தீப ஒளிதிருநாள் வாழ்த்துக்கள்.

**அடுத்த கூட்டம் 10.11.18 சனிக்கிழமை பிற்பகல் 4.30 மணிக்கு கோவை அரசு கலைக் கல்லூரியில் நடைபெறும், அனைவரும் வருக.**

முனைவர் **மு. சக்கரபாணி**
தலைவர்,கோவை-நீலகிரி கிளை.

## தர்மபுரி கிளை

தமிழ்நாடு ஒய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர்கள் கழக தருமபுரி கிளையின் 2018 அக்டோபர் மாதக் கூட்டம் தருமபுரி ஸ்ரீராமா லாட்ஜில் 13.10.18 சனிக்கிழமை மாலை 4.45 மணிக்கு கிளைத் துணைத்தலைவர் பேராசிரியர். K. குப்புசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்றது. கிளை செயலர் பேராசிரியர்.G.சின்னப்பையன் அவர்கள் அனைவரையும் வரவேற்றார் ஈரோட்டில்நடைபெற்ற 18ஆவது மாநில மாநாட்டுக்கு அதிக எண்ணிக்கையில் வந்திருந்து ஒத்துழைப்பு கொடுத்த கிளை உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. மாநாடு சிறப்பாக அமைந்தது குறித்தும் விவரித்தார். பிறகு கழக செய்திகளைப் பற்றி விவாதிக்கப்பட்டது. இறுதியாக சிற்றுண்டிக்குப் பிறகு பேராசிரியர் முனைவர் T.C.தங்கப்பாண்டியன். அவர்கள் நன்றி கூற கூட்டம் இனிது நிறைவுற்றது. **அடுத்த மாதாந்திரக் கூட்டம் 10.11.18 சனிக்கிழமை தருமபுரி ஸ்ரீராமா லாட்ஜில் மாலை 4.45 மணிக்கு வழக்கம் போல் நடைபெறும்**.

முனைவர் **G. சின்னப்பையன்**
செயலர், தருமபுரி கிளை





## சென்னை கிளை

சென்னை கிளையின்கூட்டம் தலைவர் முனைவர் வை. சுவாமிநாதன் தலைமையில் 13.10.2018 அன்று காயிதே மில்லத் அரசு மகளிர் கல்லூரியில் நடைபெற்றது. 120 உறுப்பினர்கள் கலந்துகொண்டனர்.

அண்மையில் இயற்கையெய்திய பேராசிரியர். ஏ.ஜேம்ஸ், பேராசிரியர்.ஜி. பழனியப்பன் பற்றி முறையே பேராசிரியர்.S. கோபால கிருஷ்ணன் மற்றும் பேராசிரியர்.என்.சண்முகசுந்தரம் இரங்கலுரை ஆற்றி பின் மறைந்த பேராசிரியர்களுக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது.

பேராசிரியர் முத்துசாமி ஆற்றிய திருக்குறள் உரைக்குப்பின் தனது தலைமையுரையில் கடந்தமாத முக்கிய நிகழ்வுகளாக ஈரோடு மாநாடு மற்றும் ஒய்வூதியத்திருத்த நடவடிக்கைகளை குறிப்பிட்டு, கடைசி தருணத்தில் தன்னால் செல்ல முடியாமல் போனதால், மாநாடு பற்றிய செய்திகளை வழங்க துணைத் தலைவர் முனைவர் சந்திரசேகரனை தலைவர் கேட்டுக் கொண்டார்.

சீரோடும் சிறப்போடும் நடைபெற்ற மாநில மாநாட்டில் உறுப்பினர்கள் எழுச்சியோடும் திரளாகவும் கலந்து கொண்டனர்; நமது கிளையிலிருந்து 38 பேர் வந்தனர், அவர்கட்கு பயணச் செலவு மற்றும் பேராளர் கட்டணமாக ரூ.700 வீதம் வழங்கப்பட்டது; ஏற்பாடுகளை அருமையாகச் செய்திருந்த ஈரோடு கிளைக்குப் பாராட்டுக்கள்; அறிவித்தவாறு அமைச்சர்கள் யாரும்வராதது மாநாட்டின் உற்சாகத்தை சிறிதும் பாதிக்கவில்லை என மாநாடு பற்றி பெருமையோடு விவரித்தார்.

குடும்ப நிகழ்ச்சி காரணமாக செயலர் முனைவர் லாரன்ஸ் கூட்டத்திற்கு வரவியலாததால், செயலரது அறிக்கையும் உள்ளிட்டு பல்வேறு செய்திகளை தலைவர் எடுத்துரைத்தார். ஒய்வூதிய திருத்தம் குறித்து ஒருபுறம் நல்ல முன்னேற்றங்கள் உள்ளன, மறுபுறம் குழப்பங்களும் உள்ளன. மாநிலக்கல்லூரி முதல்வர் திருத்த ஆணைகள் வழங்கி(ரூ65,700) PPO-வுக்கு அனுப்பிவிட நகலை ஆசிரியர்களுக்கும் அனுப்பியுள்ளார். இதில் பலர் பயனடைகின்றனர். ஆனால் 2006 முதல் ஒய்வு பெற்றவர்களுக்கு தற்போதுள்ளதை விட இது குறைவாக உள்ளதால் ஒய்வூதியத்தை குறைத்துவிடுவார்களோ என்ற அச்சமேற்பட்டு பதட்டமடைகின்றனர். முன்னர் பெறுவதிலிருந்து ஒரு ரூபாய் கூட யாருக்கும் குறையாது, இது தொடர்பாக PPO-வை சந்தித்துப் பேசுவோம் என உறுதியளித்தார்.

ஒரு சில அரசு கல்லூரிகள் தவிர பிறவற்றில் ஒய்வூதியத் திருத்த விண்ணப்பங்கள் அப்படியே உள்ளன. மண்டல கிளை இயக்குநரை சந்தித்துப் பேசியபோது சாதகமாக பேசினார். ஆனாலும் இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கவில்லை. இச்சூழலில் ஆட்சிக்குழு முடிவு செய்து கிளையின் சார்பில் இணை இயக்குநர் மற்றும் அனைத்து அரசு மற்றும் உதவிபெறும் கல்லூரி முதல்வர்களுக்கும் “அரசாணைகள் 313 மற்றும் 145, இயக்குநரின் செயல்முறைகள், கருவூலம் மற்றும் கணக்கு ஆணையரின் கடிதம் ஆகியவற்றின் அடிப்படையில் அக்டோபர் இறுதிக்குள் ஒய்வூதிய திருத்த ஆணைகள் வழங்குமாறு” கடிதங்கள் எழுதப்பட்டுள்ளதென தெரிவித்தார்.

இதுதவிர, அண்மையில் வந்த அரசாணைகள் 140 (ஒய்வுபெற்ற நாளுக்கு மறுநாள் ஆண்டு ஊதிய உயர்வு உரித்தாயின் அதனை வழங்கி ஒய்வூதியம்

திருத்தியமைத்தல்) மற்றும் 245 (முழு ஓய்வூதிய தகுதிக்காலம் 30 ஆண்டுகள்) ஆகியவற்றில் பயன்பெறும் ஆசிரியர்களைக் கண்டறிந்து அவர்கட்கு பொறுப்பாளர்களும் செயலூக்கமிக்க உறுப்பினர்களும் உதவ வேண்டுமென தலைவர் வலியுறுத்தினார்.

ஒவ்வொரு தலைப்பிலும் நிதி செலுத்தியுள்ளோர் எண்ணிக்கை, தொகை, மாநிலக்கழகத்திற்கு செலுத்தியுள்ள விவரம் ஆகியவற்றைத் தொகுத்து பொருளாளர் முனைவர் உஷா ரகோத்தம் அளித்த அறிக்கை உறுப்பினர்களால் பாராட்டப்பட்டது.

இம்மாதத்தில் பிறந்த உறுப்பினர்களுக்கு துண்டுகள் அணிவிக்கப்பட்டது. பேரா. நரசிம்மலு அவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினார். சென்னை கிறித்துவக் கல்லூரி ஓய்வுபெற்ற பேராசிரியர்கள் ஐந்துபேர் புதிய உறுப்பினர்களாக இணைந்தனர். கிளையின் மூத்த உறுப்பினர் பேராசிரியர் V.N. வேதாந்த தேசிகன் (வயது 91) சமஸ்கிருதத்தில் அவரது புலமை மற்றும் சாதனைகளுக்காக குடியரசுத் தலைவர் 2018-க்கான Certificate of Honour பெற்றுள்ளமைக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. இணைச்செயலர் முனைவர் ஆல்பர்ட் நன்றி கூற, கூட்டம் நிறைவுற்றது.(கிளையின் அடுத்த கூட்டம் 10.11.2018 அன்று வழக்கம் போல் நடைபெறும்)

முனைவர். **வை. சுவாமிநாதன்,**
தலைவர்,சென்னைக் கிளை.

**சேலம் கிளை**

கடந்த 13.10.2018ஆம் நாள் சேலம்-7 அரசு கலைக்கல்லூரி அறை எண் 4ல், கிளைத்தலைவர் பேரா. முனைவர் கொ. ஆறுமுகம் தலைமையில் பொதுக்குழுக்கூட்டம் நடைபெற்றது. தலைவர் வரவேற்றார்.

கிளைத்தலைவர் தனது உரையில் TANRECTA 18ஆவது மாநிலமாநாடு சிறப்பாக நடந்து முடிந்துள்ளது பற்றியும், நவம்பர் மாதம் கன்னியாகுமரியில் நடைபெறவுள்ள AIFRUCTO மாநாடு, அக்டோபர் 29ந் தேதி டெல்லியில் நடைபெறவுள்ள உயர்க்கல்வி தொடர்பான கருத்தரங்கம் மற்றும் பேரணி தொடர்பான செய்திகளை விளக்கிப் பேசினார். கிளைச்செயலர், தனது உரையில், TANRECTA 18ஆவது மாநில மாநாட்டில் சேலம் கிளையின் சார்பாக 40 உறுப்பினர்களும், அவர்களது குடும்ப உறுப்பினர்கள் ஆறு பேரும் ஆக 46 பேர் கலந்துக் கொண்டனர் என தெரிவித்தார். ஓய்வூதியர்களுக்கு 7th Pay Revision தொடர்பான கருவூலப் பணிகளை சுட்டிக் காட்டியதோடு ஓய்வூதிய திருத்த விண்ணப்பங்கள் தொடர்பான பணிகள் தருமபுரி மண்டல கல்லூரிக் கல்வி இணை இயக்குநர் அலுவலகம், கல்லூரிக் கல்வி இயக்குநர், சென்னை அலுவலகம் மேற்கொண்ட பணிகள் குறித்துப் பேசினார். கல்லூரிகளில் பணியாற்றிய தற்காலிக உதவிப் பேராசிரியர்களின் பணியை முன்னோக்கி பணிவரன்முறை செய்து ரூ.14,940,- ஊதியம் பெறுவது தொடர்பாக கல்லூரிக்கல்வி இயக்குநர் பிறப்பித்துள்ள செயல்முறைகள் பற்றியும், சேலம், தருமபுரி, நாமக்கல், கிருஷ்ணகிரி மண்டலத்தின் சார்பாக நடைபெறவுள்ள உண்ணாவிரதம் போராட்டம், தமிழ் வழி மற்றும் ஏழை மாணவர்கள் பாதிக்கும் வகையில் தமிழக அரசு சுமார் 3000 பள்ளிகளை மூட எடுத்துவரும் முயற்சிகள்





27.11.18ல் நடைபெறவுள்ள காலவரையற்ற போராட்டம் JECTO-JEO போராட்ட ஆயத்த மாநாடு முதலானவைப் பற்றி விரிவாக விளக்கிப்பேசினார்.

**பாராட்டு :** ஈரோட்டில் நடைபெற்ற TANRECTA 18ஆவது மாநில மாநாடு மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்த மாநாட்டு பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள் அனைவருக்கும் சேலம் கிளை மகிழ்ச்சியையும், பாராட்டையும் தெரிவித்துக் கொள்கிறது. பங்கேற்பதாக இருந்த அமைச்சர்கள், தோழமைச் சங்கப் பொறுப்பாளர்கள், துணைவேந்தர் முதலானோர் பங்கேற்றிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும்.

**நன்றி :** பேரா. நரசிங்கம் அறக்கட்டளை சார்பாக வழங்கும் நிதி உதவியைப் பெறுவதற்கு சேலம் கிளை பரிந்துரைத்த சேலம்-வீராணம் அகவழி தர்ம சேவை அறக்கட்டளைக்கு நிதி உதவி வழங்கிய பேரா. நரசிங்கம் அறக்கட்டளை நிதி வழங்கும் நிதி குழுவிற்கு சேலம் கிளை தனது நன்றியை தெரிவித்துக் கொள்கிறது.

18ஆவது மாநில மாநாட்டு மலருக்கு சேலம் கிளை சார்பாக விளம்பரங்கள் அளித்து உதவிய அனைத்து நல் உள்ளங்களுக்கும் சேலம் கிளை தனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறது.

**திருமண வாழ்த்து:** சேலம் கிளை உறுப்பினரும், சேலம்-7 அரசு கலைக்கல்லூரி மேனாள் வரலாற்றுத்துறைப் பேராசிரியருமான பேரா. G. தனபால் அவர்களின் மகன் திரு. D. சிங்காரவேலன் - K. ஹேமலதா ஆகியோரின் திருமண நிகழ்விற்கும், இதே கல்லூரியை சார்ந்த கூட்டுறவுத்துறை மேனாள் துறைத் தலைவர் பேரா. முனைவர் தேவராஜ் அவர்களின் மகன் R.D. கவின்ராஜ் - N. ஹர்ஷவர்த்தினி ஆகியோரின் திருமண நிகழ்விற்கும் சேலம் கிளை தனது மனமார்ந்த நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறது.

கிளைப் பொருளர் பேரா. S. இராமச்சந்திரன் அவர்கள் மாநாட்டில் கலந்துக் கொண்ட உறுப்பினர் அனைவருக்கும் பேராளர் கட்டணம், T.A. வழங்கிய விபரங்களை எடுத்துக் கூறியதோடு, மாநாட்டிற்கு வந்த கிளை உறுப்பினர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டார். இறுதியாக துணைத்தலைவர் பேரா.முனைவர் ஏ.ஸ்ரீரங்கன் அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

**அடுத்தக்கூட்டம் வருகிற 10.11.2018 சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில், சேலம்-7 அரசு கலைக்கல்லூரி வளாகத்தில் நடைபெறும்.**

10.11.2018 அன்று நடைபெறவுள்ள சேலம் கிளை பொதுக்குழுவில், பேரா. நரசிங்கம் அறக்கட்டளை சார்பாக சேலம் வீராணம், அகவிழி தர்ம சேவை அறக்கட்டளை அலுவலக பயன்பாட்டிற்கு ரூ.10 ஆயிரம் மதிப்புள்ள இரும்பு பீரோ அமைப்பில் உள்ள RACK - க்குரிய நிதியை சேலம் கிளை வழங்க இருப்பதால் உறுப்பினர்கள் அனைவரும் கலந்துக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன். TANRECTA உறுப்பினர்கள் அனைவருக்கும், தீபாவளி நல்வாழ்த்துக்களை சேலம் கிளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறது.

TANRECTA உறுப்பினர்கள் அனைவருக்கும், தீபாவளி நல்வாழ்த்துகளை சேலம் கிளை தெரிவித்துக் கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறது.

பேரா. முனைவர் **பெ. மாது,**
செயலர், சேலம் கிளை